www.tamilarangam.net

# எரிமலை

கலை பன்பாட்டு சமூக அரசியல் ஏடு. ஆவணி 1992




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடற்புலிகள் ரோந்துப் பணியில்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உள்ளே மலர்பவை



### சத்தியப் போராட்டம்

வானதியும் கஸ்தூரியும் இரு இளம் கவிகள். ஆனால் அவர்களின் கவிதைகளில் உள்ள உயிர்த்துடிப்பும் இதயத்தை அசைத்துவிடும் உருக்கமும் வியக்கத்தக்கன. இதற்கு காரணம் என்ன?

.... பக் 03.



### இராணுவம் தோற்றதேன்?

உலக விடுதலை போராட்ட வரலாற்றில் பெரும் சாதனைகள் புரிந்த கெரில்லாத் தலைவர்களின் வரிசையில்தற்போது தனி நட்சத்திரமாய் விளங்குகிறார் எமது இணையற்ற தலைவர்.

... பக் 15.



### ஆக்கிரமிப்பு குடியேற்றம்

தமிழர்களின் தாயகப் பிரதேசமான தற்போதைய அம்பாறை மாவட்டத்தில், தமிழர்கள்அவர்களின் சொந்த நிலங்களிலிருந்து அடித்து விரட்டப்பட்டு அகதிகளாக்கப்படும் அதேவேளை, சிங்களவர்கள் தமிழர் நிலங்களில் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள்.

... பக் 18



### மாவீரர் சிற்பக் கலைக்கூடம்

தமிழீழம் எங்கும் யுத்த மேகங்கள் சூழ்ந்த வேளையிலும் எமது பாரம்பரியங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டு எமக்கென உள்ள கலை பண்பாட்டுக்கூடாக வரலாற்று அம்சங்களுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டு புது மெருகூட்டப்பட்டு எமது தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களின் வழிகாட்டுதலில் ஆசீர்வாதத்துடன் புனிதமாக வளர்க்கப்பட்டு வருகின்றது.

... பக் 20.


ஆசிரியர் கருத்து .. 01

போராட்டக்காலங்களில் முதன்மைப் படுத்தப்படும் போராட்டக்கவிதைகள் .. 06

துளி முகத்துள் கங்கை. (கவிதை) .. 07

ஈழ வரலாறு கண்ட வீரபரம்பரை .. 08

புதிய பரிசோதனைகள். .. 14

ஈராக் கூர்திஷ்ரானின் சுதந்திரத்தை முன்னெடுக்கும் ஒரு தேர்தல். .. 17

சூழல் பாதுகாப்பு .. 19

காலத்தை வென்ற கலைகள். .. 23

சம கால பெண்களின் கண்ணோட்டம். .. 25

கைத்தொழில் பிரிவு .. 27

உண்மைகள். (சிறுகதை) .. 29

பசி. (சிறுகதை) .. 31

வீர வன்னிச்சி ( சிறுகதை) .. 33

விடுதலை அவாவிய பேனா .. 35

அன்னை பூமியில் (செய்தித் துணுக்குகள்) .. 36


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

**பதினோராம் ஆண்டு**

ஆவணி 1992

Comité de coordination Tamoul-France
Paris-

ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:



எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
c/o T. C. C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


# சுதந்திரத்தைப் பிரகடனம் செய்வோமா?

சிவில் நிர்வாக ஒழுங்கமைப்பு, சுயஆட்சி நிர்மாணம், புதிய அரசுக்குரிய கட்டுமானங்கள் என்ற ரீதியில் தமிழீழம் வளர்ந்துவருகின்றது. மக்களின் பாதுகாப்பை வலுப்படுத்தவும், பொருளாதாரத் தன்னிறைவைக் காணவும், சுபீட்சமான சமுதாயத்தைப் படைக்கவும் பல்வேறு அமைப்புக்கள் துரித கதியில் இயங்கி வருகின்றன. தமிழீழ ஆய்வு நிறுவனம் உற்பத்திப் பொருட்கள், நிலம், நீர், சக்தி குறித்துச் செய்யும் ஆராய்ச்சி ஒருபுறம் இருக்க, நூற்றுக்கணக்கான திட்டங்களைத் தீட்டி அவற்றை நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. புரட்சிகரமான புதிய மாற்றங்கள் புகுத்தப்பட்டு, சமுதாயச் சீர்கேடுகள், ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட்டு வருகின்றன. சீதனத்தை சட்டரீதியாக அகற்றுவது குறித்தும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெண்களின் நலன்களைக் கவனிப்பதற்கென்றே ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கலைஞர்கள், கவிஞர்கள் போற்றப்படுவதோடு, தமிழ்க்கலையும், தூயதமிழும் வளர்க்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் வரலாறுபற்றிய தொல்பியல், மானிடவியல், சமூகவியல் ஆராய்ச்சிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. இத் தேசிய வளர்ச்சிச் செயற்பாடு, சிறீலங்கா அரசின் போர் நெருக்கடியையும், பொருளாதாரத் தடையையும் உடைத்துக்கொண்டே விசாலிக்கின்றது என்பதும் மனம்கொள்ளத்தக்கது.

புதிய அரசொன்று உருவாகிவரும் வேளையில், அதனை உடைத்துக் கொட்டுவதற்காக ஸ்ரீலங்கா, இந்திய அரசுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன. சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளைக் களங்கப்படுத்த இந்தியா எடுத்துவரும் முயற்சிகளையும், ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்தும் இராணுவ நடவடிக்கைகளையும் முக்கியமாகக் குறிப்பிடலாம். இவை விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களது அபிலாஷைகளையும் அழிக்கும் நோக்கம் கொண்டவை. இத்தகு நோக்கம் தமிழீழ மக்களின் இலட்சியப் பற்றினாலும், தலைமைத்துவத்தின் உறுதியினாலும், போராளிகளின் தியாகத்தினாலும் சிதறடிக்கப்பட்டு வருகின்றது. இன அழிப்பையும், பொதுமக்கள் உயிர், சொத்துக்களை நிர்மூலம் செய்வதையும் வழியாகக் கொண்டு, ஸ்ரீலங்கா அரசாங்கம் ஒரு மக்களின் சுதந்திர நடையைத் தடைபோட எடுக்கும் முயற்சியானது தோல்வியைத் தழுவிவருகின்றது.

இத்தகு போராட்டத்தினூடே விடுதலை முனைப்புப் பெறுகின்றது. செக்கோசிலாவாக்கியாவில் செக் குடியரசுத் தலைவர்கள், ஸ்லாவியா புதிய நாடாகப் பிரிந்துபோக இணங்கிச் செயற்படுவதுபோல் சிங்களத் தலைவர்கள், உத்தமர்களாக மாறுவார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது. அரசாங்கக்கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும், ஏனைய பல சிங்களக் கட்சிகளும், வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிராகச் செயற்படப்போவதாக வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டன. ஏனைய தமிழ் குழுக்களின் கையாலாகாத பரிதாபநிலை அப்பட்டமாகவே தெரிகின்றது.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவத்தீர்வு முயற்சியும் தோல்வியில் முடிந்துவிட்டது. ஸ்ரீலங்கா அரசிடம் எவ்வித அரசியல் தீர்வும் இல்லையென்பதும் உலகம் உணர்ந்துவிட்டது. பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு கண்துடைப்பு என்பதும் அறியப்பட்டுவிட்டது. இந்நிலையில், சர்வதேச சமூகம், தமிழீழ மக்களின் நியாயமான சுதந்திர அபிலாஷைகளை அங்கீகரிக்கும் காலம் வந்துவிட்டதாகவே கருதவேண்டியுள்ளது. அண்மையில், மேற்குலகத் தலைநகர் ஒன்றில் விடுதலைப் புலிப் பிரதிநிதிகள், அந்நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடல் ஒன்றில், கிழக்கைரோப்பிய அரசுகளுக்குள் புதிய அரசுகள் உருவாவது பற்றியும், அவற்றை மேற்கைரோப்பிய நாடுகள் அங்கீகரிப்பது பற்றியும் சுட்டிக்காட்டினர். ஒரு அரசுக்குள் இருக்கும் ஒரு தேசிய இனம், தனது சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்தும்வரை, தற்போது இருக்கும் அரசுடனேயே தமது ராஜரீக உறவுகளும், அங்கீகாரமும் இருக்கும் என அந்நாட்டு அதிகாரிகளால் எடுத்துரைக்கப்பட்டது. அப்படியாயின், தமிழீழம் தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தால் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துவிடும் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

www.tamilarangam.net



# கஸ்தூரியின் ஆக்கங்கள்

## ஒரு பார்வை

வானதியும், கஸ்தூரியும் ஆனையிறவுச் சமரில் இந்த மண் இழந்துபோன இரு பெண் கவிகள். வானதியைப் பற்றி அவரின் கவிதைகளைப் பற்றி சில மாதங்களுக்கு முன் வந்த 'வானதியின் கவிதைகள்' கவிதைத் தொகுப்பு மூலம் வாசகர்கள் அறிந்திருப்பீர்கள்.

அதேபோல் கஸ்தூரியால் எழுதப்பட்ட 'கஸ்தூரியின் ஆக்கங்கள்' என்ற நூலை விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினர் வெளியிட்டுள்ளனர். இந்நூலில் கஸ்தூரியின் 17 கவிதைகளும், 4 சிறுகதைகளும், மேலதிகமாக ஒரு கடிதமும் வந்துள்ளன.



வானதியும், கஸ்தூரியும் இரு இளம் கவிகள். ஆனால் அவர்களின் கவிதைகளில் உள்ள உயிர்த் துடிப்பும், இதயத்தை அசைத்து விடும் உருக்கமும் வியக்கத் தக்கன. இதற்குக் காரணம் என்ன? விடை மிக இலகுவானது.

ஏனெனில் இவர்கள் சத்தியத்திற்காக போராடியவர்கள். உண்மைகளை நேரடியாகக் கக்க ஒருபோதும் தயங்காதவர்க்ள். போலியான, மாயையான சமூகக் கட்டுமானங்களிற்குள் சிக்குப்படாமல் உயர்ந்து நின்று வித்தியாசமாகச் சிந்தித்தவர்கள்.

அதனால்தான் இவர்களின் வார்த்தைகளிற்குள் இந்த உலகத்தை அசைத்துப் பார்க்கும் சக்தி குடி கொண்டது. சத்தியம் பிறப்பெடுத்தது.

சரி, இனி கஸ்தூரியின் கவிதைகளுக்கு வருவோம். 1989 மாவீரர் நாளுக்காக வரையப்பட்ட ஓவியத்துக்கு எழுதப்பட்ட சிறு கவிதையுடன் கஸ்தூரியின் கவிதைகள் ஆரம்பிக்கின்றன. ஓர் போராளி -மாவீரன் ஒருவனின் உடலை சுமந்து செல்லும் அவ் ஓவியத்தின் மேல்

'இதயத்தில்
இனத்தின் விடுதலை
கரத்தில் -
ஒரு தேசத்தின் வரலாறு
சுதந்திர வாசல் வரை
இவன்
சுவடுகள் ஓயாது'

என ஏழு வரிகள் பதியப்பட்டிருந்தன. இந்த வரிகளைச் சற்று ஆழமாகப் பாருங்கள். தான் சொல்ல வந்த கருத்தை மிக ஆழமாகவும், உருக்கமாகவும் இச்சிறுகவிதை வடிவம் அழகாகச் சொல்லிவிட்டுச் செல்கின்றது அல்லவா?



இக்கவிதையைத் தொடர்ந்து சிறிதும், பெரிதுமாகப் பதினேழு கவிதைகள் இந்நூலில் பிரசுரமாகியுள்ளன. ஒவ்வொரு கவிதைகளிலும் இந்த மண் சந்தித்த மறக்கமுடியாத வரலாற்றுச் சம்பவங்களைக் கஸ்தூரி அவருக்கே உரிய தனித்துவமான பார்வையில் பார்க்கிறார்.

மில்லரின் தியாகத்தைச் சுமக்கும் மதில்களைப் பார்த்து கஸ்தூரி கூறுகிறாள்:

'நம் தேசத்து
மதில்களுக்குத் தான்
எத்தனை எத்தனை
மகிழ்ச்சி
மக்கு மதில்களே!
நாங்கள் உங்களைப்
பார்த்து
கண்களைத் துடைக்
கவில்லை
மில்லரைப் பார்த்து
விம்மி அழுகின்
றோம்.

இவ் வரிகளின் மூலம் கஸ்தூரி, மில்லரின் இழப்பின் பின் அவனை நினைத்து இந்த தேசம் பட்ட வேதனையையும், பெருமையையும்



ஈழநாதம்
தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே நேரத்தில் வெளிப்படுத்துகின்றார்.

அக்கவிதையை அடுத்து அன்னை பூபதியின் தியாகத்தைத் தொடர்ந்து இரு கவிதைகளில் கஸ்தூரி வடித்திருக்கிறார். 'காலம் அவளது கை பிடித்து நகர்கிறது' என்ற தலைப்பில் அன்னையைப் பற்றி வடித்துள்ள கவிதை, இக்கவிதைத் தொகுப்பின் மிகச் சிறந்த கவிதையாக உள்ளது. அக்கவிதையின் ஒவ்வொரு வரியும் இதயத்தை துளைத்து அதன் அடி ஆழத்தில் அடையாளங்களைப் பதிக்கின்றன.

'காலையில் வந்த கதிரவன்
கல்லறை வெளிச்சத்தில்
கண் கூசிக் கை கூப்ப
மாலையில் வந்த
மஞ்சள் நிலவு -அவள்
கல்லறையின் ஒளியை
கடன் கேட்டு நிற்கின்றது.'

என்ற வரிகளில் அன்னையின் தியாகத்தைப் பார்த்து வியந்து நிற்கும் கஸ்தூரி அடுத்த பந்தியில்:

'தாயே.........!
பிரபஞ்ச வரலாற்றின்
பிரமாண்டமான உச்சியில்
உயிரோட்டத்தோடு
உன்னை நீ
செத்துச் செத்து செதுக்கிக் கொண்டாய்'

என்று அன்னைக்கே அவரின் தியாகத்தின் உயற்சியைச் சொல்கின்றார்.

இந் நூல் முழுவதும், அடக்குமுறைகளையும், அநியாயங்களையும் கண்டு கொதித்தெழும் கஸ்தூரி 'கொழுந்து கூடைகள்' எனும் சிறுகதையில் மலையகப் பெண்களின் விழிப்பிற்காகவும் ஏங்குகின்றாள்.

'சுரண்டல் தராசுகளில் கொழுந்துக் கூடைகளை கொழுவி விட்டு தேனீருக்கும் ஏங்கும் இத் தேயிலைச் செடிகள்..... அக்கினியாய் அணிவகுத்து அவலங்களை எரிப்பதெந்நாள்?' கஸ்தூரியின் ஏனைய கவிதைகளும் ஒவ்வொரு நிகழ்வையும் அவருக்கே உரிய புரட்சிகர விழிப்புணர்வோடு பார்க்கின்றன.

பத்தாவது கவிதையான 'மறைந்தவர்களே நீங்கள் மலடர்கள் அல்ல' என்ற கவிதையும், 'திலீபன் அண்ணா' என்ற பதின்மூன்றாவது கவிதையும் ஒரே கவிதை வரிகள் பலவற்றை அப்படியே மாறாமல் கொண்டுள்ளன.

'பிரச்சனைக்கு மேல்
பிரச்சனை வந்ததால்
அடிப்படைப் பிரச்சனை
அறவே மறந்து விட்டது
இன்று..... இவர்கள்......

எனத் தொடரும் சில வரிகள் இரண்டு கவிதைகளிலும் உள்ளன. கஸ்தூரியினால் ஏதோ ஒரு காரணத்திற்காக இரு கவிதைகளிலும் எழுதப்பட்ட இவ்வரிகளை பதிப்பித்தோர் தவிர்த்திருந்தால் இந் நூலுக்குச் சிறப்பாக இருந்திருக்கும்.

நூல் அமைப்பிலும் சில குறைபாடுகள் உள்ளனதான். முன் அட்டையில் உள்ள 'கஸ்தூரியின் ஆக்கங்கள்' என்ற நூலின் பெயர் நேராக எழுதப்பட்டிருக்கலாம். அதைவிட கவிதைகள் எந்தவொரு ஒழுங்கு முறையிலும் தொகுக்கப்படவில்லை. எழுதப்பட்ட காலத்தின் அடிப்படையில் கவிதைகள் தொகுக்கப்பட்டிருந்தால் கஸ்தூரியின் கால வளர்ச்சியை இலகுவாக அடையாளம் காணக் கூடியதாக இருந்திருக்கும். இந்தச் சிரமமும் வாசகர்களையே சென்றடைகின்றது.

அடுத்து, கஸ்தூரியின் சிறுகதைகளை எடுத்துக் கொள்வோம். தான் வாழ்ந்த சமூகத்தில் நடந்த -நடக்கின்ற சமூக அநீதிகளையும், ஆக்கிரமிப்பின் கொடூரங்களையும் கருவாகக் கொண்டு கஸ்தூரியின் சிறுகதைகள் வடிவம் பெறுகின்றன.

முதலாவது சிறுகதையான 'நிர்ப்பந்தங்கள்' மிக நீண்டு இருபத்தியாறு பக்கங்களை தன்னகத்தே எடுக்கிறது. இதில் வாசுகி என்ற பெண்ணை தான் நினைக்கும் புரட்சிகர சமூக வாழ்வைக் கடைப்பிடிக்கும் பெண்ணாக வடிவமைத்துக் கொண்டு அவள் மூலம் சமூகத்தைப் பார்க்கிறார் கஸ்தூரி.

இந்தச் சமூகத்தைச் சூழ்ந்திருக்கும் ஆண் மேலாதிக்க கருத்துலகம் பெண்களை அடிமை வாழ்வில் இருந்து எழவிடாமல் எப்படி எல்லாம் தடுத்திருக்கிறது என்பதை விளக்கும் இவரது பேனா, அந்த மூட வழக்கங்களை கண்டு குமுறி எழுகிறது.

வாசுகியின் அக்காவினது மரணச் சடங்கில், வாசுகிக்கு எழும் எண்ணவோட்டம் தான் இந்தக் கதை. அக்காவின் மரணத்திற்காக ஒப்பாரி வைக்கும் இந்தச் சமூகம் அவள் வாழும் காலத்தில் எப்படிப் பார்த்தது என்பதை கேள்வியாகக் கேட்கிறாள் வாசுகி.

முடிவில், கணவன் ஏற்கனவே பிற நாடொன்றில் திருமணமாகி பிள்ளைகளை உடையவன் என்பதை அறிந்ததும் அக்கா மரணத்தை தழுவுகிறாள். அந்நேரத்தில், தண்டிக்கப்பட வேண்டிய கணவன் இருக்கக் கூடியதாக அக்கா தனக்குத் தானே தண்டனையை வழங்கிக் கொண்டதை நினைத்து வாசுகி குமுறுகிறாள்.

உண்மையில், இன்று எமது சமூகத்திற்குத் தேவையானதொரு அத்தியாவசியமான கருத்தை 'நிர்ப்பந்தங்கள்' எமக்குச் சொல்கின்றது. மேற்குலகில் வாழும் -எங்கேயோ, சிறுபிள்ளையில் கண்ட - இளைஞனுக்கு இங்கிருந்து பெண்ணை அனுப்பும் பெற்றோர் கவனிக்க வேண்டிய விடயம் இது. பெண்கள் ஏற்றுமதிப் பொருளாகிப் போன அவலத்தை இச்சிறுகதையை படித்த பின்பாவது சிலர் தவிர்த்தால் -தவிர்க்க முயன்றால் அதுவே இச்சிறுகதைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

மற்ற மூன்று சிறுகதைகளும் இந்தியப் படைகள் இந்த மண்ணிலிருந்த போது இந்த மண் சந்தித்த சம்பவங்களை அடித்தளமாகக் கொண்டது.

'மக்களை பிரிந்த துப்பாக்கிகள்' 'இடம் மாறியுள்ள துப்பாக்கிகளால்......' ஆகிய சிறுகதைகள் இரண்டும் இந்தியப் படைகள் இருந்த காலத்தில் அவர்களுடன் ஒட்டியிருந்த தேசவிரோத சக்திகளின் அடாவடித்தனங்களையும், அட்டூழியங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களையும் விளக்குகின்றன. இச்சிறுகதைகள் நாம் அனுபவித்த நெஞ்சை உலுக்கும் அந்நிகழ்வுகளை எம்மில் ஓடவிட்டு எம் உணர்வுகளை கிளறுகின்றன.

'இடம் மாறியுள்ள துப்பாக்கிகளால்....' எனும் கதையில் வரும் பாக்கியம் அக்கா உண்மையில் இந்த மண்ணில் வாழ்ந்து தேசவிரோதிகளால் அழிக்கப்பட்டதொரு நாட்டுப் பற்றாளர் ஆவார்.

'மக்களை பிரிந்த துப்பாக்கிகள்' கதையில் வரும் சுமதியும் அவளது ஐயாவும் இந்த மண்ணின் ஒவ்வொரு கிராமமும் சந்தித்த மனிதர்கள். இந்தக் கதைகளின் மூலம் எம்மை அந்தக் காலகட்டத்திற்கு கஸ்தூரி அழைத்துச் செல்கிறார். அன்றைய காலத்தில் இந்த மண் பட்ட அவலங்களுக்கு கஸ்தூரியின் இச்சிறுகதைகள் வரலாற்றுப் பதிவுகளாகின்றன.

இந்நேரத்தில் எங்கள் தேசம் சந்தித்த அந்தச் சோக நிகழ்வுகளிற்கு இங்கு எத்தனை இலக்கியவாதிகள் இலக்கிய வடிவங்களை தந்துள்ளார்கள்? அந்தச் சம்பவங்களை இந்த மண் மறந்து போகத்தான் வேண்டும்? இந்தியர்களும் -அவர்களின் அடிவருடிகளும் இங்கு இருக்கையில் தான் எழுதவில்லை. வேண்டாம், இப்போது எழுதுவதற்கு என்ன வந்தது? அவர்கள் மீண்டும் வருவார்கள் என்ற சிந்தனையோ? உயிர் அழிவற்றது. அதனை காலாகாலத்திற்கும் பாதுகாக்க வேண்டும் என்ற எமது இலக்கியவாதிகளின் தத்துவம் மாறவே மாட்டாதா? என்ற கேள்விகளை எம் நாட்டின் இலக்கியவாதிகளைப் பார்த்து கேட்கவேண்டியது அவசியமாகின்றது.

அதை விடுவோம், கஸ்தூரியின் சிறுகதைகள் நான்கையும் எடுத்துக் கொண்டால் அதில் முதலாவது இடத்தை மூன்றாவது சிறுகதையான 'அவர்களுக்குத்தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே.....' என்ற சிறுகதை தட்டிச் செல்கின்றது.

இந்தியர்களுடன் போர் தொடங்கிய நாட்களில் ஒரு நாள் அவர்களின் கொடூரமான டாங்கிகளும், எறிகணைகளும் எங்கள் கிராமம் ஒன்றை.... சிதைத்த சம்பவமே இதன் அடித்தளம். ஒரு தாய், மகள், மகன்; அந்த அமைதியான குடும்பம் அழிபட்டுப் போகிறது தன் சாவை அணைக்கும் வரை அந்தத் தாயின் உணர்வலைகளை மிக உருக்கமாக வடித்திருக்கிறார் கஸ்தூரி. இந்நூலைப் படிப்பவர்களின் இதயங்களை இச்சிறுகதை அசைக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் தேவையற்றது. இறுதியாக காலத்தின் தேவை கருதி எழுதப்பட்ட கடிதத்துடன் இந்நூல் நிறைவு பெறுகின்றது. இந்நூலை நாம் படித்து முடிக்கும் போது, இந்த மண் இழந்து போன இந்தக் கலைஞனின் இழப்பிற்காக எங்கள் இதயங்கள் கனக்கின்றன. ●

**ஆக்கிரமிப்புப் படையால் அழிக்கப்பட்ட அந்த அழகிய கிராமம்**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்ட காலங்களில் முதன்மைப்படுத்தப்படும் போராட்டக் கவிதைகள் - 2

# தமிழீழப் போரும் கவிதை இலக்கியமும்



பொன். பூலோகசிங்கம்
வெளிச்சம்
தமிழீழம்.

தமிழ் ஈழப் போராட்ட வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தமிழர் போராட்டம் உரிமைகளுக்கான போராட்டமாக உருவெடுத்து நின்ற வேளையில் கவிஞர் காசிஆனந்தன் அவர்கள் 'தமிழன் கனவு' என்ற நூலை வெளியிட்டார். இது ஒரு சிறந்த கொள்கை முன்னெடுப்பு கவிதை நூலாக விளங்குகின்றது. தமிழர்களுக்கான தமிழ் அரசு ஒன்றின் தோற்றப்பாடு இக்கவிதை நூலின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது. கவிஞர் இத்தமிழ் அரசை சாத்வீக வழியிலான போராட்ட வடிவின் தளத்தில் நின்று பார்த்தாலும் ஆயுதப் போராட்டத்திற்கான கட்டியங்கள் ஆங்காங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவரது இன்னொரு கவிதையான:

"வெறிகொள் தமிழர் புலிப்படை - அவர்
வெல்வார் என்பது வெளிப்படை"

என்ற வரிகள் தீவிரவாத இளைஞர் சக்திக்கு ஊக்கமளித்தது. தமிழர் உரிமைப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் கவிதை யாத்தவர்களில் மகாகவி ருத்ரமூர்த்தி, கவிஞர் நீலாவணன், கவிஞர் முருகையன் ஆகியோர் சிறப்பிடம் பெற்றுள்ளார்கள். கவிஞர் முருகையன் அவர்கள் இன்றும் தமது கவிதையாற்றலை பல்வேறு பரிமாணங்களுக்கூடாக வெளிப்படுத்தி வருகின்றார்.

பேரினவாதிகளின் ஒடுக்கு முறைகள் பல்வேறு நிலைகளினூடாக விஸ்தாரம் பெற்ற போது தமிழர் உரிமைப்போராட்டம் ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமாகப் பரிணாமம் பெற்றது. அதனால் தமிழர் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற்றம் பெற்றது.

இக் காலகட்டத்தில் பல ஈழத்துக் கவிஞர்கள் போராட்டத்தின் பால் ஈர்க்கப்பட்டார்கள். கவிதை பற்றிய சிறந்த புலமைப்பதிவுடன் ஆயுதப் போராட்டத்திற்குள் காலடி எடுத்துவைத்த கவிஞர் புதுவை இரத்தினதுரையின் இலக்கியத்துறைப் பங்களிப்பு பல புரட்சிப் பாடல்களாக வடிவம் பெற்றதோடு பரந்தளவில் போராட்டம் பற்றிய பிரக்ஞையை மக்கள் மயப்படுத்தலாயிற்று. "ஆண்டபரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை" என்ற காசியின் கவிதை வரிகள் எப்படி தமிழர் ஆட்சியுரிமைக்கான நியாயபூர்வமான கோரிக்கையின் ஒரு கருத்தமைவாக அமைந்ததோ அதேபோல புதுவை இரத்தினதுரையின் "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற வரிகள் தாயக மண் மீட்புப் போருக்கான உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடாக வடிவம் பெறலாயிற்று.

ஈழத்துப் போராட்டக் கவிஞர்களில் தாக்கமுள்ள பங்களிப்பை வழங்கிய இன்னொரு கவிஞர் வாஞ்சிநாதன் ஆகும். இவரது கவிதைகள் அடங்கிய தொகுப்பு "தமிழரின் தாகம்" என்ற பெயரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஓவியம், கதை, கட்டுரை என தனது பல்துறை ஆற்றலை வெளிப்படுத்திய மறைந்த போராளி கப்டன் சாளி (சாள்ஸ் ஜெகோ நேசன் - நவாலி) பல போராட்டக் கவிதைகளையும் இயற்றியுள்ளார். 1987ம் ஆண்டு இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்த இந்திய இராணுவம் ஈழத்து மண்ணில் பல இந்தியச் சிறைகளை உருவாக்கிப் பல போராளிகளை சிறைக்குள் தள்ளியது. ஆயுதப் போராட்டத்தில் பின்னடைவை எதிர்பார்த்து இந்தியா மேற்கொண்ட மேற்படி செயல் பல போராளிகளைக் கவிஞர்களாகப் புடம்போடும் ஒரு பட்டறையாயிற்று.

இதனால் இன்று பல போராளிகள் படைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாளிகளாக ஒரு கையில் யுத்தக் கருவியோடும் மறு கையில் எழுது கோலுடனும் போராட்டத்தில் பங்க ளிப்பு செய்து வருகின்றார்கள்.

ஈழத்தில் வெளிவந்த பல போராட்டக் கவிதைகளில் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளைத் தாங் கிய ஒரு தொகுப்பு நூலாக 1986ம் ஆண்டு வெளிவந்த 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுப்பு நூல் போராட்ட உணர்வு ஊட்டங்களையும் ஏற்படுத்தியது. தமிழியல் வெளியீடான இந்தத் தொகுதியில் உள்ள கவிஞர்கள் சிலர் அன்று பேசிய குருதியும் போர்க்கள மும் மரணமும் தியாகமும் இன்று பாசாங்குள்ளவையாகவும் போலித் தனம் மிக்கவையாகவும் செயற்கை யானவையாகவும் காலம் அடையா ளம் காட்டியுள்ளது.

ஈழத்தின் இன்றைய கவிஞர்க ளில் புதிய சிந்தனை வீச்சை போராட்டத்தின்பால் செலுத்தி அத னூடாக கருத்துச் செறிவுள்ள கவி தைகளை சு. வில்வரட்ணம் தந்தி ருக்கின்றார். அரசியல், சமூக, சமய, தன்னுணர்வுத் தளங்களிற் காலூன்றி இவரது அனுபவங்கள் கவிதா வெளிப்பாடு கொள்கின்றன. இதேபோல் குறியீடு, படிமம் மற்றும் உவமான உவமேயத் தொடர்களில் எளிமையான சொற்களைக் கையாண்டு தனித்துவத்துடன் வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்க கவி ஞராக இயக்கச்சி கருணாகரன் வளர்ந்து வருகின்றார். இவரது கவிதைகள் இன்னும் நூலுருப் பெற வில்லை.

தென்கோடி மூலையில் வாழ்ந் திருந்தாலும் தன் கவிதை ஆற்றலால் ஈழம் பூராவும் கவிதை இரசனையை பரப்பி நின்ற போது கடந்த வருடம் சிங்களப் பேரினவாதிகளால் அம் பாறை மாவட்டத்தில் உள்ள சிறைக் கூடம் ஒன்றில் சித்திரவதை செய்யப் பட்டு தன் இருப்பை இழந்த பாண் டியூரானின் போராட்டக் கவிதைகள் என்றும் உயிர்புடையனவாகவேயுள் ளன.

தொகுத்து நோக்குமிடத்து போராட்டக் கவிதைகள் ஒரு புரட்சி கர அரசியல் மாற்றத்துடன் சமூக பொருளாதார கட்டுமானங்களிலும் பாரியமாற்றங்களை உருவாக்கக்கூ டிய வகையில் உத்வேகம் பெற்று வளர்ந்து வருகின்றன.

## துளி முகத்துள் கங்கை

உலகம் இன்று வறுமையுற்றுள்ளது
அன்பில் வறிய வன்பாலை உலகு செய்தோம்
அன்பகத்தீர்
தயவு செய்து ஒருபிடி அன்பு செய்வீரா?

பானையில் இருந்தால் அகப்பையில் வரும்
உனது பாத்திரத்தின் உள்ளே
ஒட்டிக் கொண்டிருக்கும்
அன்பின் அவிழ்பதம் கண்டாயா?
ஆயின் நீ பாக்கியசாலி
அன்பில் வறிய அயலானுக்கு அதை வழங்கு
ஒருதுளி நேசிப்பில் தொடங்குகிறது
அன்பின் இதழவிழல்

அன்பின் அவிழ்பதம் அளித்தாயா?
அதன் எதிர்வரவு காத்திராதே
வரவை எதிர் காத்திருப்பவன்
வாழ்க்கையை கடைவிரிப்பாக்குகிறான்
வாழ்க்கையோ
ஓர் தன்மலர்வின் வெளியகம்

தன் மலர்ந்த வாழ்வின் தடாகத்தெழுந்த
அமுத பாத்திரம்
மணிமேகலையின் கையில் வந்தபோது
அள்ளி வழங்க வழங்கச் சுரந்து கொண்டேயிருந்தது.
வற்றாத அன்பின் வாழ்வுடமையில்
இது ஒன்றும் அதிசயமில்லை
ஆதலால்
அன்பின் ஊற்றுமுகத்தை திறந்துவை
மானுடனே
தன்மலர்ந்த வாழ்வு உனதாகும்

துன்புறுவோரின் கால் தூசியையும் கழுவிவிடும்
அன்பின் ஊற்று
இன்பெருக்காய் எங்கும் அவிழ
அங்கழியும்தான், தனதென்ற சிறுவட்டம்
சிறுவட்டம் தாண்டி யெழுகின்ற பேரன்பு
ஆகாய கங்கையை பூமிக்கு இறக்கும்
தூயன்பின் துளிபோதும் தொடங்கு




சு. வில்வரத்தினம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழ வரலாறு கண்ட வீரப்பரம்பரை



## "நால்வர் வழியே நம் வழி"

சங்கிலி செகராசசேகரன், பண்டாரவன்னியன், கைலாயவன்னியன், பிரபாகரன் -இந்த வீரபரம்பரையின் வழிகாட்டல் செயலுந்தல் ஆகியனவே இந்த மண்ணை மீட்டிட உதவும் என்பதை நாம் நினைவில் உறுதியாக இருத்திச் செயற்படாவிட்டால் ஈழத்தமிழினத்திற்கு என்றுமே விடிவு ஏற்படாது.
இவர்களின் சாதனைகள் எமக்குத் தரும் படிப்பினைதான் என்ன?

## சங்கிலி செகராசசேகரன்


தன்மானம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று என்பவற்றின் திரண்ட வடிவமாய், அந்நியர் இம்மண்ணினைக் கொள்ள இடங்கொடாத மனத்திண்மைக்கு ஓர் இலக்கியமாய் விளங்கியவனே சங்கிலி செகராசசேகரன். இவனும் இவன் முன்னோரான யாழ்ப்பாண அரசின் மன்னரும் பெற்றிருந்த பெரும் புகழையும் வீரப்பெருமிதத்தையும் எடுத்துரைக்கும் குறிப்பு இது:

"யாழ்ப்பாணம் சிறியதேயாயினும் அதிலிருந்தரசியற்றிய சிலவரசர், தமது பராக்கிரமத்தினாலே இலங்கை முழுவதையும் கட்டியாண்டதோடு, பாண்டிநாடு, சோழநாடுகளையும் ஒவ்வோரமையங்களில் வெற்றிகொண்டிருக்கிறார்கள் என்றால், அதன் சரித்திரப் பெருமை கூறவும் வேண்டுமோ? 1505 இல் இலங்கைக்கு வந்த பறங்கிக்காறர் இலங்கையில் அநேக நாடுகளைச் சிங்கள அரசர்பாற் கவர்ந்த பின்னரும் நூறுவருடம் சென்றே யாழ்ப்பாணத்தைப் பிடித்தார்கள். அவர்கள் மூன்று முறை போர் தொடுத்தும் நிருவகிக்கவியலாது தோற்று ஓடினார்கள் என்பர். எப்படியாயினும் யாழ்ப்பாணத்தரசர் தமது நாட்டைப் பறங்கிக்காரர் காலத்திலுங்கைவிடாது நூறுவருடம் ஆண்டார்கள் என்பது உண்மை."

சங்கிலி செகராசசேகரன், யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கள மன்னனான ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகுவை (நல்லூர் கந்தசாமி கோயில் கட்டியதில் இன்றும் கூறப்படுபவன். சப்புமால் குமரையன் எனச் சிங்கள நாமம் தரித்துக் கோட்டை அரசனான ஆறாம் பராக்கிரமபாகு வளர்த்த செம்பகப் பெருமாள் என்ற தமிழன்) வெற்றிகொண்டு மீண்டும் யாழ்ப்பாண அரசை நிறுவிய பரராசசேகரனின் (1478 -1519) இளைய மகன். இவனுக்கு மூத்தோர் பண்டாரம், பரநிருபசிங்கன் என்னும் இருவர். இவர்களில் பண்டாரம் கொலையுண்டான். பரநிருபசிங்கன் மூத்தவனாயிருந்தும் சங்கிலியின் திறமை கண்டு தானே மனமுவந்து சங்கிலிக்கு அரசுரிமை வழங்கினான்.

சங்கிலியின் ஆட்சித் தொடக்கத்தில் வன்னிப் பகுதியிலே வன்னியர் குழப்பம் செய்தார்கள். அந்தக் குழப்பத்தை அடக்கி நாட்டில் அமைதியை நிலைநிறுத்திய வேளையில் அவன் புதியதொரு பிரச்சனைக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. போத்துக்கீசர் வர்த்தக நோக்கமாக ஈழம் வந்து படிப்படியாகச் சிங்களப் பிரதேச அரசுகளின் விவகாரங்களிலே தலையிட்டுச் சிறிது காலத்தில் அவ்வரசுகளின் சில பகுதிகளைக் கபளீகரஞ் செய்ததோடு யாழ்ப்பாண அரசிலும் கைவைத்தனர். இவர்களது சூழ்ச்சிக்குப் பலியான பரநிருபசிங்கன், அப்பாமுதலி (அரசபிரதானி), காக்கைவன்னியன் (ஊர்காவற்துறைத் தலைவன்) ஆகியோர் தமது குறுகிய பதவி ஆசைகளை நிறைவேற்ற வந்த ஆபாத்பாந்தவர்கள் என இவர்களைக் கருதி இவர்களோடு நட்புறவு பூண்டு சங்கிலியின் ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டனர்; இந்நோக்கத்தை மனதிற்கொண்டு போத்துக்கீசரோடு வியாபாரம் செய்வதால் யாழ்ப்பாண அரசிற்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று சங்கிலிக்கு ஆசை காட்டினர்.

க. சொக்கலிங்கம்
சொக்கன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சங்கிலி இவர்களது ஆசைவலையில் முதலில் வீழ்ந்து விடவில்லை. நீண்ட தயக்கத்துக்குப் பின் போத்துக்கீசரோடு வியாபார உடன்படிக்கை செய்து கொண்டான்; ஆனால் போத்துக்கீசர் பகல் வேளையில் மட்டுமே அரசின் தலைநகரான நல்லூரினுள் நுழைந்து வியாபாரம் செய்யலாம் எனவும் இரவில் அவர்கள் துறைமுகம் சென்று (இன்றை அலுப்பாந்தியே அன்றைய துறைமுகம்.) தங்கள் கப்பல்களிலே தங்கவேண்டும் எனவும் நிபந்தனை விதித்தான். போத்துக்கீசர் இந்நிபந்தனையை ஏற்றுச் சிலகாலம் அதன்படியே நடந்துவந்தனர்.

ஆனால் சிலநாட்கள் செல்ல, கப்பலிலே தங்குவது கடினமாய் உள்ளது என்றும் துறைமுகக் கரையிலே தமது பொருட்களைக் களஞ்சியப் படுத்தவும், தங்கவும் தற்காலிகமாய் வீடுகள் கட்ட அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டிக்கொண்டதைச் சங்கிலி ஏற்றான்.

உண்மையில் அவர்கள் வீடுகள் கட்டவில்லை. மாறாகக் கோட்டை கட்டி யாழ்ப்பாண அரசரோடு போரிடும் ஆயத்தங்களையே செய்துகொண்டிருந்தார்கள். இவ்வுண்மையை அறிந்த சங்கிலி பெருஞ்சீற்றங்கொண்டு அவர்களது கோட்டைகளை அழித்துவிட்டான். இச்செயல் போர்த்துக்கீசருக்குச் சங்கிலியை எதிர்த்துப் போர் நிகழ்த்த வாய்ப்பளித்தது. போரும் தொடங்கியது.

போத்துக்கீசர் தமது பீரங்கிகளுக்கும் துப்பாக்கிகளுக்கும் முன்பு தமிழ்ப்படையின் வாளும், வில்லும் தூசுக்குச் சமமானவை என்றே நினைத்திருக்க வேண்டும். ஆனால் சங்கிலி தலைமை தாங்கிய தமிழ்ப்படைக்குத் துணிவும், வீரமும், தன்மான உணர்வும், பேராற்றலும் மிதமிஞ்சி இருந்தமையால் போர்த்துக்கீசரால் தாக்குப் பிடிக்கமுடியவில்லை. தோல்வியின் எல்லையை அவர்கள் நெருங்கிக்கொண்டிருந்த வேளையிலே துரோகம் காக்கைவன்னியன் உருவில் வந்து அவர்களை வெற்றிப் பாதைக்கு மீண்டும் இழுத்து வந்தது. போர்க்களத்திலே யுத்த சன்னத்தனாக நின்ற சங்கிலிக்கு உதவுபவன் போல அவன் அருகில் வந்த காக்கைவன்னியனைச் சங்கிலி நட்புணர்வோடு தழுவிக்கொள்ள, அந்தத் தழுவலைப் பயன்படுத்தி வன்னியன் அவனை இறுகப் பிடித்துக் கொண்டான். சங்கிலி போர்த்துக்கேசரிடம் சிறைப்பட நேர்ந்தது. 'உடன்பிறந்தே கொல்லும் வியாதியாகத் துரோகிகள் உள்ளவரை எந்த இனமும், நாடும் உருப்படமுடியாது' என்ற உண்மைக்கு காக்கைவன்னியன் நிதர்சன சாட்சியானான்.

சங்கிலியை போத்துக்கீசர் சிரச்சேதம் செய்தனர் என்றும், சிறைப்பிடித்துத் தென்னிந்தியாவில் வைத்தனர் என்றும் சங்கிலியனுடைய முடிவுபற்றி முரண்பட்ட கருத்துக்கள் வரலாற்றாசிரியர்களிடையே நிலவுகின்றன. (14) சங்கிலி நாடகம், வன்னியனது பிடியிலிருந்து சங்கிலியை அவன் தளபதி விடுவித்து, போத்துக்கீச தளபதிக்கு விலங்கிட்டான் என்றும் போத்துக்கீசர் தமிழ்ப்படையினரால் வெருட்டிக் கலைக்கப்பட்டனர் என்றும் 'தொழுதகையுள்ளும் பகையொடுங்கிய' துரோகிகளின் செயல்கண்டு வெறுப்புற்ற சங்கிலி தன்மகனுக்கு முடிசூட்டித் தான் ஆட்சியினின்றும் விலகிக்கொண்டான் என்றும் கற்பனை செய்கின்றது. (15) சங்கிலியைக் கொடுங்கோலனாகவும் மதச்சகிப்பு அற்றவனாகவும் (மன்னாரிலே கத்தோலிக்க மதத்தைத் தழுவிய 600 தமிழரையும் தன்மகனையும் சங்கிலி ஈவு இரக்கமின்றி கொன்றான் என்பர்.) தமையன் பண்டாரத்தைக் கொன்றவன் என்றும் பரநிருபசிங்கனுக்கு உரிமையான அரசினைக் கவர்ந்தவன் என்றும் வரலாறும், செவிவழிக்கதைகளும், கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்களும் அவன் மீது கறையினைப் பூசியுள்ளன உண்மையே. ஆனால் யாழ்ப்பாண அரசின் உரிமை அந்நியர் கைபடாது காத்திட அவன் செய்த தீரப்போரும் முடிவும் அவனை மானங்காத்த மாவீரனாகப் போற்றத் தவறவில்லை. நாடகத்திலும் நவீன காவியத்திலும் சங்கிலி கதாநாயகனாகத் தன்னிகரில்லாத் தலைவனாக உலாவருகின்றான்.

'தமிழரைக் காத்த தமிழர் பெருமகன்'
எங்கும் சுதந்திரமாகவே - எங்கள்
ஈழத்திரு மணி நாட்டிலே - தினம்
நின்று நிலவிய மண்ணினைச் - சில
நீசர் பறித்திடப் பார்க்கிறார் - பெருங்
குன்றை நிகர்தவத் தோளினான் - உயிர்
கொல்லும் அரியினை ஒத்தவன் - பகை
கொன்று குவித்திட வல்லவன் -அவன்
கொற்றவன் ஆகுதல் நல்லதே.

யாழ்ப்பாணத்துத் தமிழரின் அரண்மனை இருந்த இடம் யமுனாரி (யமுனா ஏரி), தமிழரசர் அரண்மனை நுழைவாயில் என்பன இன்றும் எச்சசொச்சங்களாய் முத்திரைச்சந்தைக்கருகில் சங்கிலித்தோப்பு வளவில் அமைத்து சங்கிலி மன்னரையும் அவன் முன்னோரையும் நினைவுகூர வைக்கின்றன. செம்மணி வீதியும் பருத்தித்துறை வீதியும் சந்திக்கும் சந்தியிலே, குதிரை மீது வாளுருவிய நிலையிலே, உள்ள சங்கிலியின் சிலை கம்பீரமாக அமைந்து ஈழத்தமிழரது மான வீரத்தை மௌனமாக எடுத்துரைக்கின்றது. அவன் பெயரால் சங்கிலியன் வீதி விளங்குவதும் குறிப்பிடத்தக்கதே.

## கைலாய வன்னியன்

போர்த்துக்கீசர் இலங்கையிலே தரையிறங்கிய காலத்தில் வன்னி நாட்டின் எல்லை கிழக்கே திருகோணமலையில் தொடங்கி மேற்கில் மன்னார் வரை பரந்திருந்தது. பனங்காமம் இவ்வன்னிப் பிரதேசத்தில் மேன்மைசால் இடத்தினை வகித்தது. முல்லை நிலத்துக்குரிய காட்டுவளம், யானைச் செல்வம் என்பனவும் மருதநிலத்துக்குரிய வயல் வளமும் இங்கு சிறந்து பொலிந்தன. கிழக்கு மூலை தெற்கில் காணப்படும் கல்வெட்டுக்கள் பனங்காமம்பற்றானது வன்னியரின் தொடக்க காலக் குடியேற்றப் பகுதி என்பதை ஐயத்துக்கு இடமின்றிப் பெருமையோடு நிரூபிக்கின்றன. (18) பனங்காமம்பற்றின் ஆட்சித் தலைவர்களிலே தலைசிறந்து விளங்கியவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைலாய வன்னியன். இவன் ஒல்லாந்தர் காலத்த வன். "வன்னியின் ஆட்சியாளர்கள் ஒரு காலைக் கொம்பனியாரின் (ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கொம் பனியாரின்) நிலத்திலும், மறுகாலை அரசனின் மண் ணிலும் பதித்துக் கொண்டிருக்கிறார்கள்." என்று ஒல்லாந்த தேசாதிபதி தோமஸ் வான் றீ குறிப்பிட் டார். இவர்கள் போத்துக்கீசருக்குக் கொடுத்த தலையிடியையே ஒல்லாந்தருக்கும் நிரந்தரமாகக் கொடுத்து வந்தார்கள். தலைவர்களிலே சிலர் (ஒல் லாந்து அரசுக்கு) வழங்க வேண்டிய வருடாந்தத் திறைகளாகிய யானைகளையும், நிலவரியையும் கொடுக்காததோடு ஆண்டுதோறும் நிகழ்ந்த அரசுத் தர்பார்களுக்கும் சமூகமளிக்காது தேசாதிபதிகளின் அழைப்பினைப் புறக்கணித்தார்கள். இத்தகைய தலைவர்களிலே குறிப்பிடத்தக்கவன் பனங்காமத்துக் கைலாயவன்னியன். இவன் தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் அரசுத் தர்பாருக்குச் சமூகமளிக்கவே யில்லை என்று குறிப்பிடும் தோமஸ் வான் றீ மேலும் கூறுகின்றார், "அச்சமற்றவனும் செல்வம் நிறைந்த வனுமான இந்தத் தலைவன் 1678 இல் மரணம டைந்த பொழுது, அவன் வாரிசு பற்றி ஒல்லாந்த அதிகாரிகளுக்கு எவ்வித அறிவித்தலும் கொடுக்காது வன்னியர்கள் தம் தலைவனை நியமித்துக் கொண் டனர்.

'வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் காணிக்கை எதுக்கடா'

என்று கட்டப்பொம்மன் கேட்டதாகக் குறிக்கும் நாட்டுப்பாடல் கைலாய வன்னியனுக்கும் பொருந்து வதே. ஆட்சியாளரின் அழைப்பை ஒரு ஆண்டல்ல, ஈராண்டல்ல பன்னிரண்டு ஆண்டுகள் புறக்கணிக்கும் அளவிற்குத் துணிவும் அச்சமின்மையும் நிறைந்த மாவீரனாய்க் கைலாயவன்னியன் விளங்கியது, அவனது தன்மானப் பெருமித உணர்வுக்குத் தக்க சான்றாகும்.

கைலாயவன்னியனைத் தொடர்ந்து வன்னியர் கள் அவனைப்போல எதிரிக்குத் தாக்குப் பிடிக்க முடியாத வீழ்ச்சியைக் கண்டிருக்கலாம். எனினும் அவர்களது குறிக்கோள், பெருமிதம், வீரமறம் என் பவற்றை நாம் குறைத்து மதிப்பிடல் இயலாது. "வ லிமை வெற்றி என்ற இரண்டினையும் மட்டுமே வீரம் என்று நினைத்துக் குழம்ப வேண்டியதில்லை. வீரன் பற்றிய எமது குறிக்கோள் தியாகம், மரணம், ஏன் தோல்வியைக் கூடத் தன்னுள் அடக்கியதாகவே இருத்தல் வேண்டும். வீரனானவன் மக்களின் உணர்ச்சியைத் தொட்டு எழுப்பி விட வல்லவனாய் இருப்பான்." (20) இந்தக் கூற்றை நாம் ஏற்றுக் கொண்டால் கைலாயவன்னியன் போன்றவர்கள் மாவீரர்கள் என்பதையும் ஏற்றுக் கொள்வோம்.

இந்த ஊர்தியில் மென்பானங்கள், பதநீர், அலங்காரப் பொருட்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் என பலவற்றை நீங்கள் காண்கின் றீர்கள்.

எமது மக்கள் எதிரியின் பொருளாதாரத் தடையை தகர்த்தெறிந்து எமது பாரம்பரிய இயற்கைச் செல்வங்களான பனை, தென்னை வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி தன் னிறைவான ஒரு பொருளாதார இலக்கை நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

பனம் உணவுகள், அதன் பல பயன்பாடுகளை மக்கள் அறியவும், நுகரவும் பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் செயற்பட்டு வரு வது நீங்கள் அறிந்ததே.

"பனை வளம் கொண்டு பயன் பெறுவோம்
பலம் பெற்று பகைவனை வெல்வோம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரலாற்றுக் கற்பனை நாடகமாகத் 'தணியாத தாகம்' என்ற பெயரில் கைலாயவன்னியனின் வீரவரலாறு 1968 ஆம் ஆண்டில் வெளியானது. மூன்றாம் பதிப்பாக 1976 ஆம் ஆண்டு வெளியானதிலிருந்து (ஈழத்தமிழர் மத்தியில் நாடக நூல் ஒன்று மூன்றாம் பதிப்பாக பாட நூலாய் இல்லாமலே வெளியானது ஒரு சாதனையே) இது மக்கள் உள்ளத்தினை எந்த அளவிற்கு கவர்ந்திருக்கும் என்று நாம் எளிதில் ஊகித்துக் கொள்ளலாம். 'தணியாத தாகம்' நாடக நூலிலே இக்காலத்திற்கேற்ற பல அரிய கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றிற் சில பின்வருவன.

'தாக்காமலே தாக்கும் தந்திரத்திலே கைதேர்ந்தவர்கள் டச்சுக்காரர்கள். நமது நாட்டை அவர்கள் முற்றுகையிட்டாலும் நாம் ஆச்சரியப்படக்கூடாது. அப்படி நேரும் போது மற்றய அயலவர்களுடன் உள்ள தொடர்பு உணவு வினியோகம் யாவும் துண்டிக்கப்படும். எமது உணவு, உடை யாவும் இங்கேயே உற்பத்தியாக வேண்டும். எந்த ஒரு உதவிக்கும் அயல் நாட்டை நம்பியிருக்கக் கூடாது."

"செண்பகவல்லி! சற்று சிந்தித்துப்பார். படைகள் மட்டும் பகைவரை விரட்டி விட முடியாது. நாட்டின் எல்லையை ஊடுருவும் நயவஞ்சகப் பகைவருடைய ஒற்றர்களை எதிர்த்துப் போராட வேண்டியவர்கள் பொது மக்களாகிய நாமல்லவா?"

"நீர்த்துளி, என்று கடலுடன் கலந்து விடுகிறதோ அன்றே அதற்கு நித்திய வாழ்வுண்டு. அதே போலத்தான் நாம் தனித்துளிகள் தமிழ்ச் சமூகம் என்னும் தண்டமிழ்க் கடலில் கலந்து கொண்டால் தான் நமக்கு நித்திய வாழ்வுண்டு." இருப்பதும் ஒரே உயிர்தான். அந்த உயிர் நம்மை விட்டுப் பிரிவதும் ஒரு முறைதான். அந்த உயிரை பிறந்த நாட்டுக்காக இறந்து, விட்டுவிடுவதாக தீர்மானித்துவிட்டோம்."

கைலாய வன்னியனின் பரம்பரையில் வந்த நல்லம்பண வன்னியன் மனைவி நல்லாச்சியிலும் வன்னியரது துணிவும் மன உறுதியும் நிலவின என்பதை பின்வரும் நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.

"1790 ஆம் ஆண்டளவில் பனங்காமத்து நல்லம்பாண வன்னியன், சிங்கள வன்னியன் ஒருவனின் மறைமுகமான குற்றச் சாட்டுக் காரணமாகக் கைதியாகி கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு 12,000 றிக்ஸ் டொலர் (Rix Dollars) அபராதம் விதிக்கப்பட்டான். அவனுடைய நிலம் முழுவதும் பறிக்கப்பட்டு வண்ணார் பண்ணை வாசரான தாமோதரம்பிள்ளை என்பவருக்கு குத்தகையாக அளிக்கப்பட்டது. அபராதப் பணம் செலுத்தும் வரை நல்லம்பாண வன்னியன் சிறையிருக்க நேர்ந்தது. தாமோதரம்பிள்ளை தனது குத்தகை நிலத்திலிருந்து மூன்று ஆண்டுகள் அமோக வருவாயைப் பெற்றார். நல்லநாச்சன் (நல்லாம்பாணன் மனைவி) யாழ்ப்பாணம் வந்து வண்ணார் பண்ணையில் வசித்தார். தன் கணவன் சிறையிலிருந்து மீளும்வரை குளிப்பதில்லை என்றும், ஒரு நேர உணவே உண்பதென்றும் கடும் விரதத்தைக் அனுட்டித்தாள். வன்னியனின் குடும்ப நண்பரும் ஒல்லாந்த அரசில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தவருமான வைத்தியலிங்கச் செட்டியார் கொழும்பு சென்று அவனுக்கு விதிக்கப் பட்டிருந்த அபராதத்தை நிறுத்தி நல்லம்பாண வன்னியனை மீட்டு வந்தார்."

## பண்டாரவன்னியன்

நெற்றியில் நிலைத்த நீறும்
நீள் கரம் பிடித்த வாளும்
வெற்றியைக் குறித்த நோக்கும்
வீரத்தை விளைத்த நெஞ்சும்
உற்றவெம் பகையை வென்று
உயர் கொடியுடன் அடங்காப்
பற்றினை ஆண்ட வீரப்
பண்டார வன்னித் தோற்றம்.

என்று வர்ணிக்கப்படும் பண்டாரவன்னியன்

காற்றிலா விடினும் வாழ்வோம்
கனவிலும் அடிமைத் தாழ்வை
ஏற்றிடோம் எனப் போர் செய்த ஏந்தல்

ஆவான். இவனுடைய முழுப் பெயர் குலசேகரவைரமுத்து பண்டார வன்னியன். இவனை 'நுவரகளாவியைச் சேர்ந்தவன் எனச்சிலரும், முல்லைத்தீவை சேர்ந்தவன் எனச்சிலரும் கருதுகின்றனர். இவனது யுத்த நடவடிக்கைகள் அனைத்தும் அடங்காப்பற்றுப் பிரதேசத்திலே நடைபெற்றிருக்கின்றன.' (28)

மகாவன்னி என அழைக்கப்பட்ட நுவரகளாவிய சிங்களப் பிரதேசமாயினும் இங்கு தமிழர் குடியேறி வாழ்ந்தமைக்கான சான்று பின்வருமாறு "இரண்டாம் இராச சிங்கனின் கைதியாகி 18 ஆண்டுகள் கண்டியில் வாழ்ந்த றொபேட் நொக்ஸ் தப்பியோடியபோது, அனுராதபுரத்தில் வாழ்ந்த சிங்கள மக்களுடன் உரையாடிய பொழுது அதை அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லையென்றும் அவர்களின் தாய் மொழி தமிழாக இருந்ததென்றும் குறிப்பிடுகின்றார்." (அனுராதபுரம் மகாவன்னியுள் அடங்கியிருந்தது என்பதும் இதனால் பெறப்படுகின்றது. குலசேகர வைரமுத்து பண்டார வன்னியன் என்ற பெயர் கொண்டு இம்மா வீரன் தமிழன் என்பதும் நிருபணமாகின்றது.) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்திலும் வாழ்ந்த பண்டார வன்னியன் ஒல்லாந்தர் சாயவேர் (Dye Roots), இறையாகக் கேட்டபோழுது கொடுக்க மறுத்து விட்டான். ஈழத்தின் கரையோரப் பகுதியை ஆக்கிரமித்ததோடு, படைபலமும் மிகுந்தவர்களாய் விளங்கிய ஒல்லாந்தரின் பணிப்பினை மறுத்த இவனது துணிவு பெரிதும் பாராட்ட வேண்டியதே.

ஈழக் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்ற முடிந்த ஒல்லாந்தரால் மத்திய மலைதேசப் பிரதேசமான கண்டியைக் கைப்பற்றுவது அரிதாகவே இருந்தது. 1815 ஆம் ஆண்டுவரை ஆங்கிலேயராலும் இது முடியாமல் இருந்தற்குக் கண்டி அரசனதும் மக்களதும் சுதந்திர உணர்வும் வீரமுமே காரணமாய் இருந்தன. 'இனம் இனத்தையே சாரும்' என்ற பழமொழிக் கேற்ப வீரனான பண்டாரவன்னியனும் அவனைச் சார்ந்த வன்னியரும் கண்டியரின் சுதந்திரப் போராட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டத்தில் அவர்களுக்குப் பக்கத் துணையாயினர். இதனால் பண்டார வன்னியன் ஒல்லாந்தரதும் ஆங் கிலேயரதும் சீற்றத்துக்குள்ளானான். எனினும் அவன் இவர்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. '1803 ஆவணி 25 ம் திகதி முல்லைத்தீவில் இருந்த அர சாங்க இல்லத்தைத் தாக்கி அங்கு காப்டன் வொன் டி றீபேக்கின் தலைமையில் இருந்த படையைப் பின்வாங்கச் செய்தான். காப்டன் டி றீபேக் யாழ்ப்பா ணத்திலிருந்து வந்த வள்ளங்களின் உதவியுடன், தனது படைகளுடன் தப்பி ஓடினான்." (29)

இத்தோல்வியால் நாணமும், பழிவாங்கும் உணர்வும் பெற்ற ஆங்கிலேயர் பண்டார வன்னிய னைத் தோற்கடிக்கச் சூழ்ச்சியில் இறங்கினர். கரிக் கட்டுமுலைத் தலைவனான காக்கைவன்னியனை ஆசை காட்டி மயக்கி அவனைத் தம்பக்கமாக்கி, அவன் உதவியோடு மீண்டும் பண்டாரவன்னியனை வெல்ல முற்பட்டனர். இம்முயற்சி மும்முனைத் தாக் குதலாக உருக்கொண்டது. "ஜோன் ஜெவல் என்பவ ரின் தலைமையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு படையும், கப்டன் எட்வேட் மெச் என்பவரின் தலைமையில் திருகோணமலையிலிருந்து ஒரு படையும், கப்டன் வொன்றிபேக் தலைமையில் மன் னாரில் இருந்து இன்னொர் பெரும் படையும் தரை மார்க்கமாக வன்னிநாட்டை நோக்கிச் சென்றன."

பண்டாரவன்னியன் யாழ்ப்பாணப் படைகளை யும் திருகோணமலைப் படைகளையும் வீராவேசமாக எதிர்த்துப் போர் புரிந்தான். ஆனால் கரிக்கட்டுமு லைத் தலைவனின் சூழ்ச்சியால் மன்னாரிலிருந்து வந்த படை பற்றி எதுவும் தெரியாதிருந்தமையால், மாவீரனான பண்டாரவன்னியன் தோல்வியைத் தழுவ நேரிட்டது. மன்னார்ப் படை, அவனும் அவன் வீரரும் தூங்கிக் கொண்டிருந்தபோது முகாமிற்குள்ளே புகுந்து, வீரர் பலரைக் கொன்று அவனையும் வீரர் எண்பதிமரையும் சிறைப்படுத்தியது. இந்தச் சிறையி லிருந்து பண்டார வன்னியன் தப்பிச் சென்ற கதை மிகவும் சாகசம் நிறைந்ததாகும். அது பின்வருமாறு.

"ஆங்கிலேயரால் சிறைப்பிடிக்கப்பட்ட பண்டா ரவன்னியன் இறந்து கிடந்த வீரர்களுக்கு வீரவணக் கம் செலுத்திவிட்டு, தன்னோடு சிறை பிடிக்கப்பட்ட வீரர்களைக் கண்டு பெருமிதமடைந்தான். கப்டன் றிபேக்கை நாடி 'நேருக்குநேர் நின்று போர் செய்தவர் களுக்கு நாம் சாகும்முன் எம் வீரத்தைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் தரவேண்டும்' என்று கேட்டான். பண்டா ரவன்னியன் முன்பு தனக்கு உயிர்ப்பிச்சை அளித் ததை ஞாபகப்படுத்திய கப்டன் றிபேக் 50 வீரர்க ளைத் துப்பாக்கியுடன் நிறுத்திவிட்டுப் பண்டார வன்னியனது விருப்பத்தை நிறைவேற்ற அனுமதி அளித்தான்.

---

## வாசகர் கடிதப் பகுதி



# அக்கினிப்பூக்கள்

### மனத்தினில் திடத்தையூட்டும் எரிமலையே!

பல மைலுக்கப்பால்
ஏங்கித் தவிக்கும் எனக்கு
எரிமலையே! நீ ஆறுதல் கூறுகிறாய்.
அங்கமொன்று இழந்தாலும்
களத்தினிலே அறை கூவுகின்ற தங்கையே

அகப்பை ஏந்தும் கரங்கள் - இன்று
துப்பாக்கி ஏந்தட்டும்
தங்கை போல் பல தங்கைகளின்
அணிவகுப்பு பார்த்தவுடன்
சொல்லொணா உவகை.

எரிமலையே என் மனதில்
நீ திடம் என ஆனாய்.
இனி ஒரு போதும் ஏங்கமாட்டேன்.

திருமதி. வளர்மதி தவநாதன்
பிரான்ஸ்.

### விடுதலை வீரன்

விடுதலை வீரன்
அவன்
தரணியில்
தர்மத்திற்காக
சண்டை பிடித்தான்

இவன் பணி மகோன்னதமானது
மரணத்தின் போதும்
தடுமாறாத - இலட்சியப் பற்று
மக்களுக்காக வீரத்துடன்
போராடி மரணித்ததில்
அவன் மக்கள் மனதில்
இன்று நாளையல்ல
யுகம் யுகமாக வாழ்வான்.

கிருஷ்ணா
Froneman Str - 20 C
2572 VH DenhaeG
HOLLAND.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பண்டாரவன்னியன் 50 குதிரைகளையும், 50 வாள்களையும், ஒரு ஈட்டியையும் வெள்ளையரிடம் பெற்று 50 வீரர்களிடம் கொடுத்தான். வாளேந்திய 50 வீரர்களையும் இரு பிரிவாக்கி ஒன்றை ஒன்று நோக்கு மாறு சிறிது இடைவிட்டு நிறுத்தினான். ஈட்டியின் முனையில் தேன்தொடைப் பழமொன்றைக் குத்தி நடுவே நாட்டினான். பண்டாரவன்னியன் ஒரு ஓரமாகப் போய் நின்று "கைதட்டியதும் ஒரே பாய்ச்சலில் பக்கம் மாறவேண்டும். வாளோடு வாள் குதிரையோடு குதிரை மோதக்கூடாது. 50 பேரின் வாளும் பழத்தில் வெட்ட வேண்டும். 50 துண்டுகள் கீழே வீழ்ந்திருக்க வேண்டும். எஞ்சிய துண்டுகள் ஈட்டி முனையில் இருக்க வேண்டும்." என்று கூறினான். வெள்ளையர்கள் வியப்போடு பார்த்து நின்றனர். பண்டாரவன்னியன் ஒரு முறை பலமாக கைதட்டினான். அவன் கூறியபடி எல்லாம் நடந்தது. வெள்ளையர்கள் வியப்படைந்து நின்றனர். மீண்டும் ஒரு தடவை பண்டாரவன்னியன் கைதட்டினான். குதிரைகள் வெள்ளையர்கள் மீது பாய்ந்து தாக்கின. குதிரைப் படையை ஒருவாறு அடக்கிய ஆங்கிலேயர் பண்டாரவன்னியனைத் திரும்பிப் பார்த்தனர், காணவில்லை."

ஆங்கிலேயப்படைகளின் துப்பாக்கிகளுக்கும் தேடலுக்கும் மத்தியிலே பண்டாரவன்னியன் தப்பியோடியதாக கூறும் இந்தக் கதை மிகையுரை போலத் தோற்றலாம். ஆனால் அவன் ஆங்கிலேயருக்குத் தண்ணீர் காட்டித் தப்பி ஓடியது மட்டும் உண்மை.

1810 வைகாசி மாதத்தில் கண்டிப் பிரஜைகள் சிலரது உதவியுடன் கிழக்கு மூலை தெற்குப் பகுதியில் பண்டாரவன்னியன் தனது எதிர்ப்பை தெரிவித்தான்...... இப்படையெடுப்பின் போது பண்டாரவன்னியன் படையில் 14 வீரரே இருந்தனர்...... 1810 புரட்டாதியில் பண்டாரவன்னியன் கண்டித் திசாவையின் உதவியுடன் மீண்டும் வன்னியைத் தாக்கவிருப்பதாக வன்னிப்பகுதி கலெக்டர் ரெணருக்கு மேற்பற்று கிழக்கு முதலியார் கதிர்காமநாயகத்திடமிருந்து செய்தி எட்டியது.......1811 இல் உடையாவூரில் நடைபெற்ற போரில் பண்டாரவன்னியன் படும் காயமடைந்தான். இவனது படைவீரர் இவனைப் பனங்காமத்துக்கு எடுத்துச் சென்றனர். அடுத்த நாளே பண்டாரவன்னியன் ஆவி பிரிந்தது."

இவ்வாறு தனது உயிர் உள்ளவரை மண்ணுரிமை காத்து, மானங்காத்து, மறத்தமிழர் புகழ் காத்து மரணத்தை தழுவிக் கொண்டான் மாவீரன் பண்டாரவன்னியன்.

கல்லெனத் திரண்ட தோளும்
கடலென விரிந்த மார்பும்
'நில்' என எதிரி தம்மை
நிறுத்திடும் வீர வாளும்
கொல்லென வருவேல் காக்கக்
கொடுத்தகே டயமுங் கொண்டு
'செல்'லென எதிர்த்து வெள்ளைச்
சேனையைக் கலைத்த வீரன்.

பண்டாரவன்னியன் நினைவுச் சின்னங்களாகக் கற்சிலைமடுவில் ஒரு நடுகல்லும் ("1803 ஐப்பசி 31 இல் இதையடுத்த பகுதியிலேதான் கப்டன் வொன் டிறிபேக் பண்டாரவன்னியனைத் தோற்கடித்தான்"‹-33›) வன்னிமாநகரில் 1982 யூலை 18 இல் நிறுவப்பட்ட உருவச் சிலையும் இன்றும் நிலவி, மானங்காத்த அவனது மாவீரத்தைப் பேசாது பேசிக் கொண்டிருக்கின்றன.

இம்மன்னன் (பண்டாரவன்னியன்) ஒரு பிரமசாரி. இவனுக்குக் காதலியார் சம்மாளங்குளம் என்ற கிராமத்தில் (ஒட்டுசுட்டானிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது) காதலி ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் குருவிச்சி வன்னிச்சி. பண்டாரவன்னியன் சகோதரி பெயர் நல்லநாச்சி வன்னிச்சி. கண்டிய வன்னியனான நுவர வன்னியனின் மூத்த மகனான குமாரசிங்க வன்னியன் முல்லைத்தீவில் நடந்த ஒருபோரில் ஆங்கிலேயரின் துப்பாக்கிக்கு இரையானான். குருவிச்சி வன்னிச்சி பண்டார வன்னியனது வீழ்ச்சியைக் கேள்வியுற்றதும் நல்லநாச்சன் வன்னிச்சியோடு சேர்ந்து கார்த்திகைக்கிழங்கு என்னும் நச்சுக் கிழங்கினை உண்டு, ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியை ஊடறுத்துச் செல்லும் இடத்தின் அருகிலுள்ள குருவிச்சி ஆற்றங்கரையிலே பன்னாடை ஒன்றின் மேல் கிடந்து இறந்துபோனாள்." ●

## கரும்புலி வானில்

கரும்புலி கடலினுள் செல்கிறான் - பகைவர்
கப்பலை நோக்கிச் செல்கிறான்.
இனத்தைக் காதல் கொண்டதனால்
இறுதிப் பயணம் போகிறான்
இன்று இறுதிப் பயணம் போகிறான்.

பிறந்த தேதியை எண்ணிக் கொண்டிங்கே
பிறந்த நாட்களும் கொண்டாடுகையில்
இறக்கும் தேதியை குறித்துக் கொண்டு -இவன்
இன்றுவரை வாழ்ந்து செல்கிறான்

தன்னுயிர் ஒன்றைக் கொடுத்தேனும் - தன்
மண்ணுயிர் காக்கச் செல்கிறான்
மரணம் அவனுக்கு இல்லையடா - அவன்
மழலைகள் பேசிடும் பிள்ளையடா.

யோகி ஜிறா
Rue Bel Air - 02
2726 Saignelegier
SWITZERLAND.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியால் நடாத்தப்பட்ட ஓவியக் கண்காட்சிக்கான ஓவியங்கள் மார்ச் 6ம், 7ம், 8ம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அதில் பெண் ஒடுக்குமுறை, பெண்ணின் எழுச்சி, தேசிய விடுதலைப் போரில் பெண்களின் பங்கு, இன்றைய பெண்களின் நிலை எனப் பல்வேறு வகைப்பட்ட ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வளரும் எண்ணம் கொண்டு ஓவியங்களை வரைவதில் ஈடுபட்டுள்ள பல இளம் ஓவியர்களின் ஆர்வமான கை வேலைகளாகவே பெரும் பாலான ஓவியங்கள் காணப்பட்டன.

கலைநயம், தரம், இசைவான நிறச்சேர்க்கை, நுணுக்கம் என்ற அளவு கோல் கொண்டு இவற்றைப் பார்ப்போமேயானால் இரண்டு அல்லது மூன்று ஓவியங்களை மட்டும் தான் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஈழத்து வளரும் தலைமுறையின் முயற்சிகள் என்ற பார்வையில் பார்க்கும்போது பெரும்பாலானவை ஓவியம் என்ற தரத்துடன் உள்ளன. பார்வையாளனின் இதயத்தோடு பேசி அவர்களுக்குள் சிந்தனைத் தாக்கத்தை விளைவிக்கக்கூடியன இந்த ஓவியங்கள். கல்வித்தடை, சீதனக்கொடுமை, பாலியல் வன்முறைகள், பொருளாதாரத் தடைகள், மறுமண மறுப்பு, சுமைதாங்கி நிற்கும் சிற்றடிமை நிலைபோன்ற பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகள் பலவும் ஒவ்வொரு ஓவியங்களின் பொருளாகக் கையாளப்பட்டிருக்கின்றன.

## புதிய பரிசோதனைகள்

வெளிநாட்டு டொலர்களும் வெள்ளிப் பணமும் முள் வேலியாக நிற்க, வேலியினுள்ளே சிக்குண்டு கிழிந்த உடைகளையும், வறிய கண்களையும் கொண்ட பெண்கள் வேலிக்கு வெளியே நடக்கும் ஆடம்பரமான திருமணம் ஒன்றை வெறித்துப் பார்க்கின்றனர். வேலிதாண்ட முடியாத அந்த வெள்ளை உள்ளங்களின் வேதனை இரைச்சல் எமக்கும் கேட்கின்றது, நெஞ்சத்தை அடைக்கின்றது.

சுமையின் தாக்கத்தால் தான் பெற்ற பெண் குழந்தையையே கழுத்தை நெரித்துக் கொல்லும் தாய், ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் பாலியல் வன்முறைக்குள்ளாகி நிற்கும் பெண்கள், அழிக்க நினைக்கும் பூச்சிகளையும், பேய்களையும் தரையிலே தேய்க்கும் பெண்கள், ஆயுதமேந்திய பெண்கள், குழந்தைகள் பெறும் தொழிற்சாலையல்லவெனக் குமுறி எழும் பெண்கள்... இவ்வாறு பெண்கள் மீதான அடக்குமுறையிலிருந்து அவர்களது எழுச்சிவரை ஏறத்தாழ தமிழீழப் பெண்களை முழுமையாகப் படம் பிடித்துக்காட்டும் வகையில் ஓவியங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

ஏறத்தாழ 125 ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன; இந்த ஓவியங்கள் கலை ஆழமும், அழகு நயமும், நுணுக்கமும் உடையனவா என்பதல்ல இங்கு முக்கியம். இதுவரை மறைந்தோ, மறைக்கப்பட்டோ இருந்த புதிய தலைமுறையின் 125 புதிய பரிசோதனை முயற்சிகளாகவே நாம் இவற்றைப் பார்க்கலாம். இவற்றிலெல்லாம் உருவ அமைப்பைவிட உள்ளடக்கமே மேலோங்கி நிற்கின்றன.









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# யாழ் குடாப் படை எடுப்பின் தோல்வி

மதி

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் யாழ்குடாநாட்டுப் படையெடுப்பான "பலவேகய 2" என்ற இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. குடாநாட்டின் மீதும், விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தின் மீதும் குறிவைத்தே இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.



விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட Y - 8 சினரக விமானம்

வெற்றிலைக்கேணியில் இருந்த முகாமோடு ஆனையிறவை இணைப்பது, பிரதான நிலப்பகுதியுடன் தொடர்பைத் துண்டித்து, குடாநாட்டை தனிமைப்படுத்துவது ஆகியவே தமது நோக்கம் என அரசாங்கம் அறிவித்ததாயினும், குடாநாட்டை ஆக்கிரமித்து, அங்கு இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவதே அரசின் ஒரே குறிக்கோள் என விடுதலைப் புலிகள் கண்டு கொண்டனர். இதன் பின்னர், அரசியல் தீர்வொன்று காணவே தேவையில்லை என்பதே அவர்களது திட்டம். தற்போது இருக்கின்ற பிரதேச சபைகளுக்கு சில கூடுதலான அதிகாரங்களை வழங்கினாலே போதும் என்பதே அவர்களது உள்ளார்ந்த வாதம். விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க முடியுமானால், அடுத்த கணமே, ஏனைய தமிழ்க் குழுக்களை குப்பைத் தொட்டியில் வீசியெறிய தயாராய் இருந்தது சிங்கள இனவாதம். இவ்விராணுவத் தீர்வுக் கான காலகட்டத்தில் சர்வதேச சமூகத்தைச் சமாளிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு கைவசம் இருந்தது. தமிழ் மக்களின் அபிலாசைகளின் அடிப்படையில் எவ்வித தீர்வும் காணாமல், வட - கிழக்கு இணைப்புக்குச் சம்மதிக்காமல் காலத்தைக் கடத்துமாறு ஸ்ரீலங்கா அரசால் தெரிவுக்குழு பணிக்கப்பட்டிருந்தது. சர்வதேச சமூகம், இதனைக் கண்டும் காணாதது போல் நடித்துக்கொண்டிருந்தது ஒருபுறம், கொழும்பின் தயவில் தங்கியிருந்த தமிழ் குழுக்களோ நன்றாக ஏமாற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

குடாநாட்டின் படை எடுப்பின் போது -பல்வேறு புதிய, நவீன ஆயுதங்கள், வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஸ்ரீலங்காவால் வாங்கப்பட்ட 27 T-55 செக்கோஸ்லவாக்கிய டாங்கிகளில் பல, மணற்பகுதிகளை ஊடறுத்துச்செல்ல தரையிறக்கப்பட்டன. வெற்றிலைக்கேணி, கட்டைக்காடுப் பகுதிகளில் தரை இறக்கப்படும் போது, கந்துல என்ற என்ற கட்டளைக் கப்பலோடு, தென்கொரிய ரோந்துப் படகுகளும், சீனப் பீரங்கிப் படகுகளும் கடலில் செயல்பட்டன. 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் கடற்கரைப் பகுதியில் குவிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் கடுமையாக மோதினர். குவிக்கப்பட்ட படையினரைச் சிதறடித்தனர். யாழ்க்குடாநாடே போர்க்கோலம் பூண்டிருந்தது. போர்ச்சூழ்நிலையில் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்குடன் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் செயல்ப்பாடும் இப்படையெடுப்பை கருத்தில் கொண்டு நிறுத்தப்பட்டது. ஏராளமான ஸ்ரீலங்கா துருப்பினர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்காணோர் காயமடைந்தனர். செக்கோஸ்லாவாக்கியா டாங்கிகள் மூன்று தாக்கி அழிக்கப்பட்டன. இயக்கச்சியின் ஊடாக குடாநாட்டினுள் பிரவேசிக்கும் முயற்சி பல தடவை விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த தாக்குதலால் தடுக்கப்பட்டது. இராணுவ இழப்புடன், எவ்வித முன்னேற்றத்தையும் காணத இராணுவத்திற்கு விமானப்படை போக்குவரத்து விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதானது பேரிடியாய் அமைந்தது. சீனரக Y 8 விமானம் அரசாங்கத்திடம் இரண்டே உள்ளது. 100க்கு மேற்பட்ட ஆயுதப்படையினரையும், ஏராளமான ஆயுதத் தளபாடங்களையும் காவிச் செல்லக் கூடியது. சண்டை நடைபெற்ற கடற்கரைப் பகுதியில் இறக்குவதற்காக கொண்டு செல்லப்பட்ட ஏராளமான வெடி பொருட்கள்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

வெடி மருந்துகள், ஆயுதங்கள் என்பனவும் அழிந்தன. இதில் பயணம் செய்த 6 ஆகாயப்படை அதிகாரிகள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏயார் மார்ஷல் வோல்ற்றர் பெர்ணாண்டோவின் மகனும் இதில் உயிரிழந்தார். விடுதலைப் புலிகளின் 90 mm விமான எதிர்ப்பு பீரங்கியால் சுடப்பட்ட இவ்விமானம் வானவெளியிலேயே வெடித்துச் சிதறிது. அரசாங்கம் இயந்திரக் கோளாறினால் விமானம் விழுந்து வெடித்ததாக கூறியதாயினும், விமானப்படை நிபுணர்கள், குண்டு தாக்கி வான் வெளியில் வெடித்துச் சிதறியதை ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

போரை தொடரும் சாத்தியத்தை குறைத்தது. இதனைத் தொடர்ந்து, இரண்டு வாரங்களுக்குமேல் பெரும் அட்டகாசத்துடன், பெரும் வெற்றிகளை தனது இராணுவம் சாதிக்கப் போவதாக பீற்றிக்கொண்ட குடாநாட்டுத் தளபதி ஜெறிட் சில்வாவின் தலைமையில் தொடங்கிய குடாநாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. தாம் இறங்கிய கடற்கரைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள பல்லாயிரம் இராணுவம், கடல்வழி வினியோகத்தைப் பெரிதும் நம்பி, எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் என்பது கேள்விக்குறியாகும். விடுதலைப் புலிகளின் இடைவிடாத கெரில்லாத் தாக்குதல்கள் இடம்பெறும்

கள். இவ் ஒப்பந்தத்தை கேவலமாக மீறிய ஸ்ரீலங்கா அரசு -தெல்லிப்பளையில் முன்னேறியதாக பெருமையடித்துக் கொண்டிருந்தது. அங்கும் இடைவிடாத தாக்குதலுக்கு உள்ளான இராணுவம் விரட்டியடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் தோல்விக்கும், தமிழீழ மக்களின் வெற்றிக்கும் -பெருமைக்குரிய காரணமாக இருப்பவர்கள் தமிழீழ விடுதலைப் போராளிகளும், அவர்களுக்குத் துணையான மக்களுமே ஆவர். தலைவர் பிரபாகரனின் சாதுரியமான, சமயோசித உத்தி மாற்றங்களே -களத்தில் விடுதலைப் புலிகளுக்கு வெற்றியை கொடுத்தன என்று கூறுவதில்



செக்கோஸ்லவாக்கியா பவல் கவச வாகனம்



தென்னாபிரிக்க T - 55 ரக டாங்கி

பெரும் உண்மை உள்ளது.

குடாநாட்டில், அரை மரபுப் போரினைக் கையாண்டு எதிரியைக் கலங்கவைக்கும் அதே வேளை, ஏனைய காட்டுப்பகுதிகளில் கெரில்லாத் தாக்குதலினை மேற்கொண்டு எதிரிக்கு பேரழிவுகளை ஏற்படுத்துவதானது ஸ்ரீலங்கா அரசின் இராணுவ திட்டங்களை தவிடுபொடியாக்கி வருகிறது.

குடாநாட்டின் மீதான நெருக்கடியின்போது, எதிரிகளின் எல்லைக்குள் நுழைந்து தாக்கி, முகாம் ஒன்றை அழித்து, போரின் போக்கையே மாற்றிய செயல், உலக விடுதலை போராட்ட வரலாற்றில், பெரும் சாதனைகள் புரிந்த கெரில்லாத் தலைவர்களின் வரிசையில் தற்போது தனிநட்சத்திரமாய் விளங்கும் எமது தலைவர் பிரபாகரனால் மட்டுமே முடியும். ●

இதனைத் தொடர்ந்து, வவுனியா மாவட்டத்தில், செட்டிக்குளப்பகுதியில், ஸ்ரீலங்கா இராணுவப்பின்னலுக்குள் அமைந்திருந்த மினி இராணுவமுகாம் மீது விடுதலைப் புலிகளின் விசேட படையணி ஒன்று தாக்குதல் நடத்தி அழித்தது. 52 பேர் வரையிலான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 3 பவல் கவச வாகனங்கள் அழிக்கப்பட்டன. ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 11ம் திகதி நடத்தப்பட்ட இத்தாக்குதலைத் தொடர்ந்து அரசாங்கம் தடுமாறியது. தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளையே இழக்க நேரிடுமோ என அஞ்சியது. வான்வெளிப் போக்குவரத்துக்கும், வினியோகத்துக்கும் தேவையான Y 8 விமானத்தின் வீழ்ச்சியும் குடாநாட்டுப்

அதேவேளை, ஸ்ரீலங்காவின் கடற்படைக் கப்பல்கள் கடற்புலிகளின் தாக்குதலுக்கும், கண்ணிவெடிகளுக்கும் சிக்கி அழியும் ஆபத்தும் உள்ளது. மேலும், விமானங்களும், உலங்கு வானூர்திகளும் புலிகளின் விமான எதிர்ப்பு பீரங்கிகளுக்கு அஞ்சி நடுங்குகின்றன. இந்நிலையில், முன்னர் ஆனையிறவைக் காப்பாற்ற நடந்தது போல், வெற்றிகரமாக பின்வாங்குவதைத் தவிர வேறுவழியில்லை.

காங்கேசந்துறைப் பகுதியிலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தப் பிரகாரம் உணவுப் பொருட்களை பொது மக்களுக்கு கொண்டு வருவதற்காக கண்ணிவெடிகளையும், பாதுகாப்பு அரண்களையும் விடுதலைப்புலிகள் அகற்றினர்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈராக் கூர்திஷ்ரானில் சுதந்திரத்தை முன்னெடுக்கும் ஒரு தேர்தல்.

வளவன்

இவ்வருடம் மே 20ம் திகதி ஈராக் நாட்டில் கூர்திஷ் மக்கள் வாழும் பகுதியில் தேர்தல் ஒன்று இடம் பெற்றது. இப்பகுதி ஈராக் கூர்திஷ்ரான் என்று அழைக்கப்படுவது. ஈராக்கின் வடபகுதியிலும், துருக்கி, சிரியா, ஈரான் ஆகிய நாடுகளிலும் பரந்து வாழும் இம்மக்கள் தமக்கென்றொரு சுதந்திர நாட்டுக்காக அவ்வந்தரசுகளுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டம் நடத்தி வருகின்றனர்.



இவ்வருடம் தேசிய சபைக்காகவும், அதன் ஏக தலைவருக்காகவும், இத்தேர்தல் இடம்பெற்றது. இதில் விசேசம் என்னவென்றால், ஈராக் அரசின் சம்மதம் இல்லாமல் இடம்பெற்றதுதான். ஈராக் இத்தேர்தலை சட்டவிரோதமானது எனக் கண்டித்துள்ளது. அதேவேளை துருக்கி, ஈரான் அரசாங்கங்களும் இத்தேர்தல், கூர்திஷ்ரான் மக்களின் கோரிக்கையான சுதந்திர நாட்டுக்கு இட்டுச் செல்லும் எனவும், தமது நாடுகளில் வாழும் கூர்திஷ் மக்கள், ஈராக் கூர்திஷ் மக்களுடன் இணைந்து கிளர்ச்சிகளில் ஈடுபட வழிவகுக்கும் என்றும் கண்டித்துள்ளன.

இத்தேர்தலின்போது, தனிச் சுதந்திர நாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்படாததுகுறிப்பிடத்தக்கது. உடனடியாக இக்கோரிக்கைக்கு சர்வதேச சமூகத்தில் உள்ள வல்லரசு நாடுகளிடையே ஆதரவு இல்லாமையே காரணமாகும். மேலும், சூழ உள்ள நாடுகளும் இக்கோரிக்கையின் அடிப்படையிலான தேர்தலைத் தடுக்க முயலும் என எதிர்பார்க்கப்பட்டது. அண்டை நாடான துருக்கி, அமெரிக்காவின் நண்பனாகவும், மத்திய கிழக்கின் சமபலச்சீரமைவில் மேற்குலகினதும், நேற்டோவினதும் முக்கிய நாடாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இத்தேர்தல் சுய ஆட்சியை வலியுறுத்துவதாக அமைந்த போதிலும், ஈராக்கின் இறைமையைப் பாதிப்பதாகவோ, தனி நாட்டுக் கோரிக்கையாகவோ அமையவில்லை.

மேற்கு நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஐ. நா. சபையின் உதவியுடன் ஏற்படுத்திய ஆகாயப்படையின் பாதுகாப்புக்குடையின் கீழேயே இத்தேர்தல் நடைபெற்றுள்ளது. ஈராக் அரசாங்கம், கூர்திஷ்ரான் எல்லைப் புறங்களில் தனது படைகளைக் குவித்திருந்த போதிலும், உள்ளே வந்து தேர்தலைக் குழப்ப முடியவில்லை . 10 நாடுகளைச் சேர்ந்த 45 சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் செயல்பட்டிருந்தார்கள். ஈராக், துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்தோரும் இதில் அடங்கி இருந்தனர். ஐ. நா சபையும் பூரண ஒத்துழைப்பு வழங்கியிருந்தது.




சர்வதேச நிலைமைகளுக்கேற்ப தனிநாட்டுக்கோரிக்கை - முன்வைக்கப்படவில்லையாயினும், தற்போது இருக்கின்ற அரசின் சம்மதம் இல்லாமல் தேசிய சபைக்கும், அதன் தலைவருக்குமாக நடத்தப்பட்ட தேர்தல் கூர்திஷ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்பதையும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. சர்வதேச சமூகத்தின் ஆதரவு இருக்குமென்றால், சுதந்திர தனிநாட்டை ஈராக் கூர்திஷ்ரானில் அமைப்பதற்கு முன்னரான கடைசிப்படியாக இதனைக் கொள்ளலாம். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென் தமிழீழத்தில் பரவும் சிங்களம்

தமிழர்களின் தாயகப் பிரதேசமான தற்போதைய அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் சொந்த நிலங்களில் வசதி வாய்ப்புகளுடன் திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேற்றத்தை நடத்தி சிங்களவர்களுக்கான அம்பாறைத் தொகுதியை உருவாக்கியுள்ளது அரசு.

அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டதன் பின்பு முஸ்லீம் மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தனர். இந்நிலை மெல்ல மெல்ல மாற்றமடைந்து தற்பொழுது சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டதை நாம் அறியாமல் இல்லை.

காலத்துக்குக் காலம் சிங்கள இனவாத அரசு இன வன்முறையைத் தூண்டியதனால் விவசாயத் தொழிலை மேற்கொண்ட தமிழர்களும், தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்த தமிழர்களும் தமிழர் பிரதேசங்களில் இருந்து விரட்டப்பட்டனர். இவ்விடங்கள் எல்லாம் சிங்களவரின் வதிவிடங்களாகவும், தொழிலிடங்களாகவும் மாறின.

முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக (தாங்கள்) வாழ்வதால் அம்பாறை மாவட்டம் தங்களுடைய மாவட்டம் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிங்கள அரசியல் தலைமைப் பீடங்களோ தங்கள் இன விரோதப் போக்கின் தன்மையில் கிழக்கு மாகாணத்தைச் சிங்கள மாகாணமாக மாற்ற வேண்டும் என்ற திட்டத்தின்படி அம்பாறை மாவட்டத்தின் எல்லை நிர்ணயங்களை மாற்றினார்கள்.

அருகிலுள்ள மாவட்டங்களான மட்டக்களப்பு மாவட்டம், மொனறாகலை மாவட்டம், பதுளை மாவட்டம், பொலநறுவை மாவட்டம் ஆகியவற்றின் பிரதேசங்களின் சில பகுதிகளை அம்பாறை மாவட்டத்துடன் இணைத்து சிங்கள சனத்தொகையை அதிகரிக்கலாயினர்.

தொகுதி முறையில் தேர்தல்கள் மூலம் அம்பாறைத் தொகுதியில், ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகிய தொகுதிகளில் மூன்று முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களும் பொத்துவில் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாதலால் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டு வந்தனர்.


ஸ்ரீலங்காவில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதனால், அம்பாறை மாவட்டத்தில் இருந்து நான்கு சிங்கள இனப் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒரு முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினரும், ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையினால் சிறுபான்மை இனத்திற்குப் பாதகமான நிலைமையையே அம்பாறை மாவட்டத்தில் காண்கிறோம். இவ்வாறான நிலையை அம்பாறை முஸ்லீம் மக்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு சிறுபான்மை இனத்தைப் பயன்படுத்தி, மற்றுமோர் சிறுபான்மை இனத்தை நசுக்குகின்ற சிங்களப் பேரினவாதத்தின் தன்மையை சகல சிறுபான்மை மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் இயற்கைப் பெருக்கத்தைக் கொண்டு விரைவாகச் சிங்களப் பெரும்பான்மையை ஏற்படுத்த முடியாது என்ற எண்ணத்தில் துரித கதியில் சிங்கள மக்களை அரசு திட்டமிட்டு குடியேற்றி வருகின்றது.

உருவாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் பாதிப் பிரதேசத்தை அபகரித்து சிங்களவர்களின், முஸ்லீம்களின் சொந்த நிலமாக மாற்றிய சிங்கள இனவாத அரசு 11. 06. 90 க்குப் பிறகு மீண்டும் எமது தாயக மண்ணில் உருவான ஆக்கிரமிப்புக்கெதிரான போரினை நன்றாக பயன்படுத்தி தனது கடந்த காலத் திட்டங்களை அமுல்ப்படுத்தத் தொடங்கியது.

தற்பொழுது பொத்துவில் பிரதேசத்தில் வாழ்ந்த 1305 தமிழ்க் குடும்பங்கள் தங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத கார



■ சிங்களக் குடியேற்றங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ணத்தை முன்னிட்டு இடம் பெயர்ந்து திருக்கோவில் பிரதேசத் தில் வாழ்கின்றனர்.

இச்சந்தர்ப்பத்தை ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்தத் தொடங்கியுள் ளது. லகுல, பாணமை போன்ற இடங்களில் தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களில் அவர்களை விரட்டி விட்டு சிங்களவர்களைக் குடியேற் றியுள்ளது. இதேபோல் பொத்து வில் 4ம் கட்டையிலும் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தியுள் ளது.

அம்பாறை நகரத்திற்கு மிக வும் அருகாமையில், அம்பாறை நகரம் அமைந்துள்ள பிரதேசம் சிங்களவரால் அபகரிக்கப்பட் டதற்குப் பிறகு மல்வத்தை என் கின்ற பழந்தமிழ்க் கிராமம்தான் எமது தற்காலிக எல்லையாக அமைந்திருந்தது. இப்பொழுது இதனை அண்டியுள்ள வளத்தாப் பிட்டி, மல்லிகைதீவு போன்ற தமிழ்க் கிராமங்களிலும் சிங்களவர் கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

உல்லை என்பது உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கும் தமிழர்களின் உல்லாசபுரி. இப் பொழுது இந்த உல்லாசபுரி சிங் கள மீனவர்களின் கிராமமாக மாறியுள்ளது. அரச உதவிகளி னால் நவீன மீன்பிடி உபகரணங் களைப் பெற்றுள்ள இம்மக்கள் நீர்கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டனர். இவர்களுக்கு பாதுகாப்பு, மற்றும் வசதிகளை சிங்கள அரசு ஏற்படுத்திக் கொடுத் துள்ளது.

சாதாரண உபகரணங்களு டன் மீன் பிடித் தொழிலை மேற் கொண்ட முஸ்லீம் மீனவர்கள் இதனால் பெரிதும் பாதிப்படைந் தனர்.

பொத்துவில் 2 ம் குறிச்சி யில் அவசியமற்ற முறையில் குடி யிருந்த புத்தபிக்குகள் தமிழீழ மண் மீட்புப் போராட்டத்தைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியே றியிருந்தனர். இவர்கள் மீண்டும் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப் பட்டுள்ளனர். அதுமட்டுமல்ல 'கம் உதாவ' எழுச்சிக் கிராமங்களை ஸ்ரீலங்காவின் பலவிடங்களில் நிறுவி சிங்களவர்களின் வாழ்வை வளம்படுத்தி வந்த இனவாத அரசு தமிழர்களைப் புறக்கணித்தே வந் தது.

தமிழர்கள் அந்நிய நாட்டு மக்கள் என்பதனை ஏற்று, அதனை நியாயம் எனக் கருதி னாலும் -

தற்போது தமிழ் நிலத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற் காக எழுச்சிக் கிராமம் அமைப் பதை நியாயமென அனுமதிக்க முடியுமா?

தற்பொழுது பிறாகலை என் னும் இடத்தில் 50 க்கும் மேற்பட்ட புதிய வீடுகளைக் கட்டி, புதிய குளங்களை அமைத்து, புதிய பாதைகளை ஏற்படுத்தி, பாதுகாப் புக்காக இராணுவ முகாம்களை நிறுவி, ஊர்காவல் படை முகாம் அமைத்து, சிங்களக் குடியேற்றத் தின் மறைப் பெயராக எழுச்சிக் கிராமம் ஒன்றை உருவாக்கும் இனவாத அரசின் போக்கை எந்த நீதியுள்ள சமுதாயமும் கண்டிக் காமல் இருக்க முடியுமா?

தமிழ் மக்களுக்கு எந்தவித குறைகளுமில்லை. அவர்களைப் புறக்கணிக்கவில்லை. பாகுபாடாக அவர்கள் நடத்தப்படவில்லை. அவர்களும் இந்த நாட்டுப் பிர ஜைகளே என்று கூறும் ஸ்ரீலங்கா இனவாத அரசு தமிழர் நிலங்களில் எழுச்சிக் கிராமமும், சிங்களக் குடியமர்த்தலும் உருவாக்கி தமிழர் களைப் புறக்கணிக்கவில்லையா என்பதை நன்றாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

நன்றி: சுதந்திரச்சுடர் 4

# மரம் நடுகை, பாதுகாத்தல், முக்கியத்துவம்

சுற்றுப்புறச் சூழல் சமநிலைக்கும் காலநிலை சீர்குலைவதை தடுத்தலின் பொருட்டும், பூமியின் மேற்பரப்பானது 30 சதவீதமாவது ஆழ்வேரமைப்பைக் கொண்ட நிரந்தரமான தாவரங்களால் மூடப்பட்டிருக்க வேண்டும் என்பது சூழவியல் ஆய்வாளர்களின் முடிவு.

தாவரங்களின் காபன் தன்மயமாக்கல் மூலம் வளியில் உள்ள காபனீரொட்சைட்டை (கரியமிலவாயு) நீக்கி ஒட்சிசனை (பிராணவாயு) கூட்டுகின்ற தன்மையுடையன. மனிதன் உட்பட உயிர்வாழும் சகல உயிரினங்களுக்கும் சுத்தமான ஒட்சிசன் மிகவும் அவசியமானதொண்றாகும். உயிரினங்கள் வாழும் இடங்களிலும், சேதனப் பொருட்கள் அழியும் இடங்களிலும் காபனீரொட்சைட் பெருகும். இவ்வாறு பெருகும் காபனீரொட்சைட் தாவரங்களின் காபன் தன்மயமாக்கல் மூலம் குறைக்கப்பட்டு, அதன் அளவு சமநிலையில் பேணப்படும். இவ்வாறு காபனீரொட்சைட் பேணப்படாது விட்டால் உயிரினங்கள் பூமியில் வாழ முடியாத ஒரு சூழ்நிலை தோற்றுவிக்கப்படும். தாவரங்களின் வேர்கள் நிலத்தடி நீரை ஆவியீர்ப்பு மூலம் வளிமண்டலத்தி னுள் செலுத்தி மழை பெய்வதற்கு தேவையான முகில் கூட்டங்களை உண்டாக்க உதவுகின்றன. சூழலில் ஏற்படுத்தப்படுகின்ற ஒலிகள் 95 டெசிபெலுக்கு மேலாக அமையுமாயின் அது மனித செவிப்புலனைப் பாதிப்பதுடன், உள நோய்களையும் தூண்டக் கூடியது என்பது மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் கருத்து. அண்மைக்காலத்தில் இந்திய விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகள் அயன மண்டலத்தில் வளரக்கூடிய வேம்பு, சவுக்கு என்பன சூழலில் ஏற்படுத்தப்படுகின்ற தீங்கான ஒலிகளைக் குறைப்பதில் முதலாம் இரண்டாம் இடத்தை வகிப்பதாக கூறுகின்றன.

எமது தேசத்தின் காலநிலைத் தன்மையில் வளரக்கூடிய முக்கனி தரும் மரங்களில் முதலிடம் வகிக்கும் மாமரம் காபனீரொட்சைட்டை தன்மயமாக்கல் மூலம் ஒட்சிசனாக மாற்றுவதில் முதலிடம் வகிப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறு கின்றன. மக்கள் கூடும் விழாக்கள் நடக்கும் இடங்களில் மா இலை தொங்கவிடப்படும் பழக்கம் இந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம்.

வேப்பஞ் சருகுகளும், குழையும், புளியமர சருகுகளும் உவர் நிலங்களைத் திருத்துவதற்குப் பாவிக்க லாம் எனவும் ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் சிற்பக் கலைக்கூடம்



தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது விடுதலைப் புலிகளின் வரலாறு ஆகும். தமிழீழ மண்ணின் நிலை கண்டு விடுதலை உணர்வு கொண்டு போராட உறுதி பூண்டு புலிகளாயினர் இளந்தமிழர்கள். இம்மறவர்படை படைத்துள்ள சாதனைகள் பலதரப்பட்டவையாகும். விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்வேளையில் சமகாலத்தில் இக்களப்புலிகள் சமைத்துவிட்ட சமூக, கலை, பண்பாடு மேம்பாடுகளும், தமிழர் பாரம்பரியம், பண்பாடு விழுமியங்களுடனான புதிய படைப்புகளும், உற்பத்திமுறைகள், கண்டுபிடிப்புகள் தரநிர்ணயம் வாய்ந்தவையாகும். மேலாக எமது அடுத்த தலைமுறையினர் எமது மண்ணின், சுதந்திரத்தின், மொழியின் வரலாற்றுச் சிறப்பம்சங்களை தெளிவாக அறிந்து இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய வண்ணம் சம காலத்தில் உருவாக்கி வீரச்சாவில் தம்மை அர்ப்பணித்து மாவீரர்களாகிக் கொண்டிருக்கிறுர்கள் புலி வீரர்கள். ஆம் பிறந்த மண்ணிற்காக விடிந்த பொழுதெல்லாவற்றையும் போராடியே வாழ்வைத் துறந்த இளந்துறவிகளே மாவீரர்களாவர். இம்மாவீரர்களின் அர்ப்பணிப்புகள் உறுதியான வடிவம் பெற மேல்வாறான வரலாற்று அம்சங்கள், போர்க்கால நிகழ்வுகள் காலத்தால் அழியாதவைகளாக பேணிப்பாதுகாக்க வேண்டியது இந்த மண்ணின் பணியாகும். எனவே இத்தகு சிறப்புகளை கலையம்சமாக நினைவுபடுத்தும் நோக்கில், தமிழர் பாரம்பரிய கலையான சிற்பக்கலை நுணுக்கத்துடன்கூடிய வரலாற்றுச் சிற்பங்களாக வடிவமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. இச்சிறப்புப் பணியை தமிழீழ மாவீரர் சிற்பக் கலைக்கூடம் மேற்கொண்டுள்ளது. இக் கலைக்கூடத்தின் சிற்பங்களின் உருவாக்கத்திற்கு மூலகாரணமாயிருந்தவர் மாவீரர் மேஜர் ஜேம்ஸ் ஆவார். இக்கலைக்கூடம் ஆனையிறவுப் போர் தொடங்கிய நாட்களில் அப்போதய யாழ். மாவட்டப் புலிகள் தளபதி திரு. கஸ்ரோவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இம் மாவீரர் சிற்பக்கலைக்கூடத்தில் உருவாகும் சிற்பங்களில் இடம் பெறும் அம்சங்கள் வரலாற்றுத் துறையில் ஆர்வங்கொண்ட விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் (பேபி சுப்பிரமணியன்) அவர்கள் நிர்ணயித்து வருகிறார். குமரிக்கண்டம் முதல் தொடங்கும் மொழிவரலாற்றுச் சிற்பங்களும் பலவரலாற்று உண்மைத் தொல்லியல் சான்றுகளுடன் பல்கலைச்சான்றோர் கருத்துடன் தெரிவுசெய்யப்படுகிறது.

இவ்வகைச் சிற்பங்கள் மகோற்கனி மரத்தில் பலதரப்பட்ட வடிவங்களில் செதுக்கப்படுகிறது. மேலும் மரபு ரீதியான கோயில் சிலைகள், தூண்கள், வாகன வேலைகள் என்ற தன்மையிலிருந்து விலகி சம கால நிகழ்வுகளை, உள்ளதை உள்ளபடியே இந்த மண்ணில் நடந்ததை நடந்தபடியே, நிகழ்ந்தபடியே, போராளிகளின் உண்மைத் தோற்றங்களுடன் போர்க்களத்தில் நிகழ்த்திய வீரஞ்செறிந்த கள நிகழ்வுகளை அப்படியே சித்தரிக்கும் வண்ணம் வடிவமைக்கப்படுகின்றது. இக்கலைக்கூடம் சிற்பத்துறைக்கு ஒரு புதிய பரிமாணத்தை கொடுத்ததென்றால், மிகையற்றதாகும்.

கலைக்கூடத்தில் தயாரித்து முடிக்கப்பட்ட சிற்பங்கள் சிலவற்றையும் அவற்றில் அமைந்த தன்மைகளையும் ஆய்வுக்கெடுத்தல் சிறப்பானதாகும். முதலாவது சிற்பம் ஆனையிறவுப் போர்க்காலத்தில் செய்துமுடிக்கப்பட்டது. இது 68 செமீ, 36 செமீ, 5 செமீ அளவுடையது. இச் சிற்பத்தில் இந்தியப் படையுடனான யுத்தத்தில் ஒரே ஒரு வாசூக்கா ஷெல் தாக்குதலில் இரு ரி. 72 ரக ரஷ்சியத் தயாரிப்பான இந்திய யுத்த டாங்கிகள் இரண்டை தகர்த்த மேஜர் ஜேம்ஸின் தாக்குதல் சித்தரிக்கப்பட்டு செதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. இச்சிற்பம் செய்து முடிக்கப்பட்ட நாட்களில் ஆனையிறவுப் போரில் வீரச்சாவை அடைந்த மாவீரர்களது புகமுடல்கள் யாழ். நகர் நோக்கி வந்த வண்ணமிருந்தன. எனவே மாவீரர்களுக்கென பொதுவான ஒரு சிற்பம் அமைக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


முடிவாகி செய்யப்பட்டதுதான் "தமிழீழ மாவீரர் நாள் நவம்பர் 27" எனப் பெயர் கொண்ட சிற்பமாகும். இச்சிற்பம் ஓவியர் ரமணியின் மாவீரர் நினைவுநாள் எனும் தலைப்பிலான ஓவியத்தை அடிப் படையாகவைத்து செய்யப்பட்ட தாகும். இச்சிற்பத்தில் விடுதலைப்போராளிகள் மதவேறுபாடின்றி போராட்டத்தில் இருபாலாரும் இணைந்து போராடி மாவீரராகி பின்னர் அவர்கள் ஆத்மார்த்தமாக மலரும் தமிழீழத்தை நோக்கி வருவது போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து வாருங்கள், எரிந்த இடத்தில் இருந்து நீங்கள் நிமிர்ந்து வாருங்கள்" எனும் கவிதை வரியைக் கருவாகக் கொண்டதே இச் சிற்பமாகும்.

மூன்றாவது சிற்பம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இச் சிற்பம் "சார்ல்ஸ் அன்ரனி(சீலன்) சிறப்புப் படை அணி தொடக்கம் 15. 07. 1991" எனும் தலைப்பிலானதாகும். ஆனையிறவு யுத்தத்தில் விடுதலைப் புலிகளின் "ஆ. - க. வெ" (ஆகாய, கடல், வெளி) இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளின் முதலாவது சிறப்புப்படை அணி, மாவீரர் சீலன் (சார்ல்ஸ் அன்ரனி) இன் பெயரில் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்படைஅணி மரபுவழி இராணுவமாகச் செயற்பட்டு ஆனையிறவு யுத்தத்தில் விடுதலைப் புலிகள் ஒரு முழுமையான மரபுவழி இராணுவத்திற்குரிய சிறப்பை உடையவர்கள் என்ற மதிப்பீட்டை உலக இராணுவ ஆய்வாளர்கள், அவதானிகள் மத்தியில் ஏற்படுத்தியது குறிப்பிடத் தக்கதாகும். எனவே இவ் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு சிற்ப வடிவு பெறலாயிற்று. இச் சிற்பம் 82 செமீ, 36 செமீ, 5 செமீ அளவுடையதாகும். இதில் மாவீரர் லெப். சீலனின் பெயர் வைத்தமைக்கான காரணம் விளக்கப்பட்டுள்ளது. அந்த நாட்களில் முற்றும் முழுதான கெரில்லா அமைப்பாக புலிகள் இயக்கம் இயங்கிய காலம். அனைத்து செயற்பாடுகளும் இரவும் பகலும் தலைமறைவு வாழ்க்கையையே விடுதலைப்புலிகள் கைக்கொண்டிருந்தனர். இந் நாட்களில் ஒருநாள் (15. 07. 1983) அன்று மீசாலையில் சீலன், ஆனந், இன்னொரு போராளி ஆகிய மூன்று புலிகளும் ஸ்ரீ லங்கா இராணுவத்தால் சுற்றிவளைப்புக்குள்ளாகி ஆனந் அந்த இடத்திலேயே வீரச் சாவை அடைந்தார். சீலன் நடக்க முடியாதபடி காயமுற்றிருந்தார். மற்றைய போராளி சிறு காயத்திற்குள்ளாகியிருந்தார். அந்தக் கணம் சீலன் வேகமாகச் சிந்தித்தார். ஒரு சில ஆயுதங்களையே புலிகள் வைத்திருந்த காலம் அது. எனவே தாம் வைத்திருக்கும் ஆயுதம் எதிரிகளிடம் பிடிபடக் கூடாதென்பதில் சீலன் உறுதியாய்ச் சிந்தித்தார். அத்துடன் உயிருடன் எதிரியிடம் பிடிபடக் கூடாதென்ற தலைவரின், இயக்கத்தின் இராணுவக் கோட்பாட்டை கடைசிவரை ஒழுகவேண்டும் என்ற எண்ணம் மனதில் உற்றுத் தாங்கி இருந்தது. அத்துடன் சயனைட் பழக்கத்தில் இல்லாத காலமாகும். எனவே அதில் முன்னுதாரண தற்கொலை ஒன்றுக்கு சீலன் ஆயத்தமானார். ஆம், தனது துப்பாக்கியை தன் சகாவிடம் கொடுத்து தன்னைச் சுட்டுக் கொன்றுவிட்டு ஆயுதங்களையும் பாதுகாப்பாக கொண்டு போய்த் தலைவரிடம் போய் சேர்" என கட்டளையாய்ப் பணித்தார். சக போராளியும் களநிலையை உணர்ந்து கட்டளைக்குப் பணிந்தார். சீலனின் துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு தப்பிச்சென்றார். இந் நிகழ்ச்சி சிற்பத்தின் இடப்பக்கத்தில் சித்தரிக்கப்படுள்ளது. அந்த நாட்களில் ஸ்ரீ லங்கா இராணுவம் பாவித்த டிரக்குகள், ஜீப்புகள் உள்ள மாதிரி மரத்தோப்பினுள் இராணுவ சுற்றிவளைப்பும் இங்கு சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. சிற்பத்தின் வலப்பக்கத்தில் நடுவே சீலனின் மார்பளவு உருவச் சிலையும் சீலனின் இரு புறமும் போராளிகள் வரிப்புலி சீருடையுடன் சமகாலத்தில் களத்தில் பாவிக்கும் சகல விதமான ஆயுதங்களுடன் மரபுவழி இராணுவ அணி நடையாக களம் நோக்கிச் செல்வதுபோன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் நான்கு வரிசையில்வரும் போராளிகள் முப்பரிமாணத்தில் செதுக்கப்பட்டிருப்பது கூர்மையான கலைச்சிறப்பை உடையதாகும். அத்துடன் விடுதலைப்புலிகளின் இராணுவக் கண்டுபிடிப்புகளும் இதில் அணியாக வரும் போராளிகள் கரங்களில் காட்டப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். மேலும் 50சமீ 36சமீ பரப்பளவில் 250க்கு மேற்பட்ட சிறிய அளவில் படையணி வீரர்கள் அமைந்திருப்பது இச்சிற்பத்தின் மேலும் ஒரு சிறப்பம்சமாகும். இத்தகைய இச்சிற்பம் தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்த தினத்தன்று கலைக்கூடத்திலிருந்து வெளியானது.

அடுத்த சிற்பம் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் பற்றியதாகும். இதில் புலிகளின் ஆரம்பகாலப் பயிற்சி முகாம் அமைந்த தன்மை காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் புலிகளின் ஆரம்பகாலத்தில் தமிழகத்தில் நடைபெற்ற பயிற்சி முகாம் பொறுப்பாளராயிருந்த லெப். கேணல் பொன்னம்மானின் மார்பளவு உருவச்சிலையும் பயிற்சிமுறைகளும் அதன்பின் பயிற்சி பெற்ற அணியினர் தொகுதியின் அணிநடையும் தேசியக் கொடிக்கு (புலிக்கொடி) மரியாதை தெரிவிப்பு நிகழ்வும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் 68சமீ 42-சமீ 5சமீ அளவுடையது. இதில் பலதரப்பட்ட அளவில் 6 சமீ உயரத்திற்குட்பட்டதாக 300க்கு மேற்பட்ட போராளிகளின் உருவங்கள் முப்பரிமாண நோக்கில் அமைக்கப்பட்டுள்ளன. இது மிகவும் நுண்ணிய வேலைப்பாடுடையதாகும்.

ஐந்தாவது சிற்பம் பெண் போராளிகள் பற்றியதாகும். இதில் முதல் பெண் போராளியும் மகளிர் படைப் பிரிவின் முதல்தளபதியுமான மேஜர் சோதியாவின் மார்பளவு உருவத் தோற்றமும் தமிழீழ தேசியக் கொடியேந்திய வண்ணம் மகளிர்படைஅணி அணிவகுத்து தென்னந்தோப்பினூடு செல்வது போலவும் செதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியப்படையுடனான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்தத்தில் மகளிர் படை அணியினரின் தாக்குதலில் தகர்க்கப்பட்ட ரி-72 ரக இந்திய யுத்த டாங்கியும் அது நிகழ்ந்த இடமும் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் மகளிர் படைப்பிரிவின் முதிர்ந்த அனுபவத்தை விளக்கக்கூடியது.

ஆறாவது சிற்பம் கரும்புலித் தாக்குதல் பற்றியதாகும். விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில் முதன்மைபெற்ற தாக்குதல் முறையான இத்தற்கொலைப்படைத் தாக்குதல் முறை விடுதலைப் புலிகளாலேயே வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இவ்வரலாற்றுப் பெருமை மிக்க தாக்குதல் முறையில் முதல் தாக்குதலை நடாத்தியவர் கரும்புலி கப்டன் மில்லராவார். எனவே இச்சிற்பத்தில் கரும்புலி மில்லரின் மார்பளவு உயரத்தோற்றமும், மில்லர் தாக்குதலுக்கு பயன்படுத்திய வெடிபொருட்கள் நிரப்பிய கொள்கலன்களை ஏற்றிய கவசம் பொருத்தப்பட்ட கன்ரர் ரக டிரக்வண்டியும், கரும்புலி தாக்குதல் நடந்தபோது ஏற்பட்ட பெரும்கட்டிட, இராணுவச்சிதறல்களும் சம்பவம் நடந்தபோது உள்ள மாதிரியே செதுக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.


அடுத்து மாங்குளம் முகாம் தாக்குதலும் லெப். கேணல் போர்க்கின் கரும்புலித் தாக்குதலும் சிற்பவடிவம் பெறுகிறது. இவ்வாறு கலைக்கூடத்தில் சிற்பப் பணி தொடர்ந்துகொண்டிருக்கின்றது. இவ்வாறான சிற்பங்கள் வரிசைப்படுத்தி வைக்கும் கலையமாக எதிர்காலத்தில் அமையப் போவதுதான் தமிழீழ மாவீரர் கலைக்கோட்டம் ஆகும். இம்மாவீரர் கலைக்கோட்டத்தின் மாதிரி அமைப்பு ஒன்று தமிழீழ மாவீரர் சிற்பக்கலைக்கூடத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக வைத்தே தமிழீழ மாவீரர் கலைக்கோட்டம் எதிர்காலத்தில் அமையவுள்ளது.

இக்கலைக்கோட்டம் முன் முகப்பு 24 தூண்களில் நிறுத்தப்பட்டதும், உச்சியில் பாயும் புலி சின்னம் அமைக்கப்பட்டதும் திராவிடர் கலைச் சிறப்பைக் கொண்டதுமாக முன்முகப்பு அரங்கைக் கொண்டுள்ளது. அத்துடன் 38 ஒளித்தூண்கள் பொருத்தப்பட்ட 6மீற் அகலமான சுற்றுத்தளத்தையும், 70மீற் 30மீற் பரப்புடைய தளமண்டபத்தையும் உடையது. மண்டபத்தின் கீழ்தளம் மாவீரர் கலையரங்கமாகவுள்ளது. மேல்தளத்தின் உள்பிரகாரத்தில் 6மீற் அகலமான சுற்றுப்பிரகாரமும், நடுவே 50மீற் 18-மீற் பரப்புடைய தொல்பொருளியல் கூடமும் அமைந்துள்ளது. இத்தொல்பொருளியல் கூடத்தை சுற்றியுள்ள உள்பிரகாரத்தில், வரலாற்றுச் சிற்பங்களைத் தாங்கி நிற்கும் தொல்லியல் கூடத்தில் தமிழ் மன்னர்கள் பாவித்த ஆயுதங்கள், நுண்கலைப்பொருள்கள், தமிழர் வரலாற்று சான்றுகள், தமிழ் இலக்கிய ஏடுகள் என்பன இடம் பெறும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு போராளிகள் கலைஞர்கள் ஒன்றிணைந்த செயற்பாடாக இக்கலைத்துறை வளர்ச்சியுற்று வருகின்றது. எதிரியுடன் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்திலும் எல்லைக்காவலரண்களில் கண் உறங்காது கடமையில் களத்தில் நிற்கும் வேளையிலும் எமது பாரம்பரியங்கள் சிந்திக்கப்பட்டு கலைபண்பாட்டு வழியே எமது வரலாறு முன்னெடுக்கப்படுவதை இக்கலைகூட நிகழ்வுகள் கோடிட்டுக் காட்டும். தமிழீழமெங்கும் யுத்த மேகங்கள் சூழ்ந்துள்ள வேளையிலும் பொருளாதார நெருக்கடி உச்சம்பெற்ற போதிலும் எமது பாரம்பரியங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டு எமக்கென உள்ள கலை பண்பாட்டுக் கூடாக வரலாற்றம்சங்களுக்கு புத்துயிரளிக்கப்பட்டு புதுமெருகூட்டப்பட்டு, எமது தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் வழிகாட்டுதலின் ஆசீர்வாதத்துடன் புனிதமாக வளர்க்கப்பட்டு வருகின்றது. தமிழர்களின் பொற்காலமென வரலாற்றாசிரியர்களால் கருதப்படும் சோழர்கால கலை நிகழ்வுகள் தமிழீழ மண்ணில் உயிர் பெற்றெழுவதை இம்மண்ணில் காணலாம். கலைக்கூடப் பணிகள் தொடரும்.

தலைமை சிற்பாசிரியர்,
மாவீரர் சிற்பக்கலைக்கூடம்,
தமிழீழம்.
21. 04. 1992

## ஓவியக் கண்காட்சி



தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பிரான்ஸ் கிளையினரால் நடாத்தப்படவிருக்கும் ஓவியக் கண்காட்சிக்கு, நாம் வாழும் காலத்தின் யதார்த்தத்தை உணர்த்தி எமது வாழ்வியல் பிரச்சனைகளை உள்வாங்கி நிற்கும் ஓவியங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. வளர்ந்து வரும் ஓவியர்கள், ஓவியக்கலையில் ஆர்வமுடையோர்களிடமிருந்தும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்களது ஆக்கத்துடன் முழுப் பெயர், தொடர்பு முகவரி போன்ற விபரங்களையும் எரிமலை முகவரிக்கு காலதாமதமின்றி அனுப்பிவையுங்கள்.

www.tamilarangam.net






- வேலு -

## கலை என்றால் என்ன?

கலைஞனின் ஈடு இணையற்ற அனுபவம்தான் கலை. (ART is the Unique Experience of Artist) கலை என்பது மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கக் கூடியதாகவே இருந்து வருவது அதன் தனிச்சிறப்பு. சுருங்கக் கூறவேண்டுமாயின் அது ஒரு காலக்கண்ணாடி. அதனால்தான் அது கால வெள்ளத்தால் அழியப்பட்டாலும், அல்லது அழிக்கப்பட்டாலும் மீண்டும் மீண்டும் அதனைப் போற்றி ஆராய்ச்சி செய்யுமளவிற்கு உயர்ந்த நிலையை அடைகின்றது. "இன்றைய நிகழ்வுகள் நாளைய வரலாறு" என்பதனை உறுதி செய்து கொண்டே இருப்பதும் கலைகளே! எந்த ஒரு காலத்தின் நிகழ்வுகளும் கலைகளாக பரிணமிக்கவில்லை என்றால் அது சரித்திரமாவதற்கு சாத்தியமில்லை. எந்த ஒரு சமூகத்தின் நாகரிக வளர்ச்சிகளும் கலைகளின் ஊடாகவே உறுதி செய்யப்படுகின்றன. உணர்வுகளின் நிரந்தர ஊடகங்கள் கலைகளே.

## நாகரிகத்தின் எல்லையும் கலையே!

பழங்கலைகளை பாதுகாத்து போற்றுவதும், நிகழ்கால கலைகளை வரவேற்று வாழ்த்துவதும் ஒரு சமூகம் முன்னுக்கு சென்று கொண்டே இருக்கின்றது என்பதனை உறுதி செய்யும் கூறுகளாகும். பழங்கலைகள் பாதுகாக்கப்படாமலும், வளர்கலைகள் வரவேற்கப்படாமலும் ஒரு சமூகம் இருக்குமாயின் அது தன்னைத்தானே அழித்துக் கொண்டிருக்கிறது என்பது நிதர்சனம். உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்கள் அனைத்தையும் அதன் கலைகள் மூலமாகத்தான் அறிந்து கொள்ள முடிகின்றது.

## நால்வகை நாகரிகங்கள் - யார் அவர்கள்?

கிரேக்க நாகரிகம், எகிப்திய நாகரிகம், சீன நாகரிகம் ஆகியனவே மிகவும் பழமையான நாகரிகங்கள் என்றும் அவ்வின மக்கள்தான் மனித சமூகத்தின் முன்னோடிகள் என்றும் கருதப்பட்டு வந்த காலமும் உண்டு. ஆனால் 1837 க்குப் பிறகு சிந்து, கங்கைச் சமவெளிகளில் உள்ள புதையுண்ட நகரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா என்ற இரு இடங்களில் தொல்லியல் வல்லுனர்களால் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் பின் மேற்கூறப்பட்ட நாகரிகங்களுக்கும் முந்தியதொரு நாகரிகம், அல்லது சம காலத்தில் வளர்ந்த ஒரு சிறப்பான நாகரிகம் இருந்து வந்துள்ளது என்பது தெரியவந்தது. அந்த சிறப்பான நாகரிகத்துக்கு சொந்தமான மக்கள் திராவிடர்கள் எனவும், அந்த நாகரிகம் திராவிட நாகரிகம் எனவும் அறியப்பட்டு உறுதி செய்யப்பட்டது.

## யார் திராவிடர்கள்?


திராவிடர்கள் என்போர் தமிழர்களே! திராவிடர்கள் 4000 ஆண்டுகட்கு முன்பே உபயோகித்த "தொல் திராவிடம்" என்ற மூல மொழியாகிய திராவிட மொழியும் தமிழும் ஒரே ஒலிப்பு முறையைக் கொண்டிருப்பதாக மொழியியலாளர்கள் அறியத்தருகின்றனர். தொல் திராவிட வடிவங்கள் (Proto Dravidian Forms) பெரும்பாலும் தமிழுடனேயே ஒத்து இருக்கின்றன எனவும் மொழியியல் வல்லுனர் கார்டுவெல் அவர்களும் கூறியுள்ளார். ஏனைய திராவிட மொழிகளில் உள்ள இன ஒலிகளைவிட தொல் திராவிட தமிழுக்கும் இடையே இன ஒலி நெருக்கம் அதிகமாகவே உள்ளதை "திராவிடச் சொற் பிறப்பியல்" அகராதியின் (A Dravidian Etymological Dictionary) மூலமாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. திராவிடத் தொல் இனமான தமிழ் இனத்திலின்று பல கூறுகளாகப் பிரிந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கோத்தா, தோடா ஆகிய மொழிகளைப் பேசும் மக்களும் திராவிடர்களே! அத்துடன் தெலுங்கிலிருந்து பிரிந்த கோண்டி, கூவி, கோண்டா போன்று 10 மொழிகளைப் பேசும் மக்களும், வடதிராவிட மொழிகளான குருக், மால்தோ, டிராகூய் போன்ற மொழிகளைப் பேசுகின்ற மக்களும் திராவிடர்களே!

## நாகரிகங்களின் வரலாற்று வரிகளில் கலை!

எந்த ஒரு நாகரிகமும் நதிக்கரையில்தான் தோன்றியிருக்க வேண்டும். அது இயற்கையின் இயங்கியல் ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், எதார்த்த ரீதியாகவும், தத்துவார்த்த ரீதியாகவும் அறியக்கூடியதே. நாகரிகங்களின் தோன்றல்கள் யாவும் நதிக்கரையில்தான் தோன்றியுள்ளன என்பது ஆராய்ச்சியின் இறுதியான முடிவுமாகும். நதியற்ற நாகரிகம், நாதியற்ற நாகரிகமாகவே கால வெள்ளத்தால் கரைந்து போயின என்பது வரலாற்று நிகழ்வுகள். நாகரிகங்கள் நதிக்கரையில் பிறந்தாலும் அவை கலை என்ற ஒரு அம்சத்தை கணக்கில் கொள்ளாது, அல்லது வாழ்வியலில் இணைத்துக்கொள்ளாத நாகரிகங்கள் யாவும் தங்கள் முத்திரையை வரலாற்று வரிகளில் பதிக்கத் தவறிவிட்டன. எங்கெங்கு கலைக்கு மரியாதை இல்லையோ -கலைகள் பேணப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படவில்லையோ அங்கெல்லாம் அவ்வினம் தன் வரலாற்று வரியை எழுதத் தவறிவிட்டதாகவே கொள்ளலாம். ஓர் இனம் இவ்வுலகில் தொடர்ச்சியாக தன் வரலாற்றைப் பதிக்க விரும்புமாயின் அது தொடர்ச்சியாக கலைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். இதுவே வரலாற்று நிகழ்வு. இவ்விதம் 70,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மனித இனமானது தம் வரலாற்றை எழுதத் தொடங்கிய காலம் சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முன்புதான். இந்த 4,000 ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக அது தன் வரலாற்றை எழுதியுள்ளதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். மனித இனமானது தன் வரலாற்றை உலகப் பொது மொழியாம் கலை மூலமாகவே படைத்து வந்துள்ளது -படைத்துக் கொண்டும் உள்ளது -படைக்கவும் இருக்கின்றது.

## "இனங்கள்" எவ்வாறு இனங்காணப்படுகின்றன?

தம் வரலாற்றைப் பதிக்கும் இனம் கலை மூலமாகவே அதனை படைத்துவரினும் அந்தக் கலையானது ஒரு படி மேலே சென்று கண்டம், நாடு, மதம், மொழி, இனம், வர்க்கம் என்ற பாகுபாட்டையெல்லாம் மீறி நிகழ்வுகளைச் சொல்கின்றது. அந்நிகழ்வுகள் எந்த ஒரு இனத்திற்கு, நாகரிகத்திற்குச் சொந்தமானது என்பதனை -கலை வடிவமாக அதனைப் படைத்த ஒரு படைப்பாளி அதில் (கலையில்) தன் உணர்வுகளையும் அனுபவத்தையும் இணைத்து விடுகின்றான். அது ஒரு தற்செயல் நிகழ்வுதான் என்றாலும் அது தவிர்க்க இயலாததும், மறைக்க முடியாததுமாகி விடுகின்றது. அவைதான் ஒரு கலைப்படைப்பு எந்த ஒரு இனத்தைச் சார்ந்தது என்பதனை அடையாளங்காட்டி விடுகின்றன. காலத்தால் அழியாத கலைகள் தன்னையும் தன்னைப் படைத்த இனத்தையும் இவ்வுலகிற்கு இனங்காணச் செய்து கொண்டேயிருக்கின்றன. அது தன் பெருமையினை மட்டுமன்றி தன்னை உருவாக்கிய இனத்தின் பெருமையையும் பறை சாற்றிக் கொண்டே இருக்கின்றன. அவ்வாறு தன் இனங்காட்டும் கலைகள் யாவும் தன் படைப்பாளியின் குணங்களையும் காட்டத் தவறுவதில்லை. இவ்விடயத்தில் படைப்பாளி என்பது அது படைக்கப்பட்ட இன மக்களைக் குறிப்பதாகும்.

## எது உயர் கலை நோக்கு?

சுமார் 4000 ஆண்டுகட்கு முன் தோன்றிய இரு பெரும் நாகரிகங்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோமாயின் -அவர்களால் படைக்கப்பட்ட கட்டிடக் கலைகளையே மேற்கோளாக எடுத்துக் கொள்வோம். நைல் நதிக்கரையிலே தோன்றிய எகிப்திய நாகரிகச் சின்னமாக வானுயர்ந்து நிற்கும் பிரமிடுகளையும் (Piramid) பல்லாயிரம் ஆண்டுகளாய் பூமிக்கடியில் புதையுண்டு கிடந்த திராவிட நாகரிகச் சின்னமாக விளங்கும் மொகஞ்சதாரோ, ஹரப்பா நகரின் மையங்களில் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட "பொதுக் குளியல்" குளத்தையும் (Common Bath) எடுத்துக் கொள்வோம். அன்றைய எகிப்திய மன்னர்களான "பாரோ" (Paros) க்கள் தாங்கள் இறந்த பின்பும் உயிர் வாழ்வதாக எண்ணி தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள், ஆபரணங்கள், உடைகள், செல்வங்கள் ஆகியவற்றைத் தம்முடன் புதைக்கச் சொல்லியதோடு மட்டுமின்றி தாங்கள் இறக்கும் முன்பாகவே தங்களுக்காக கல்லறைகளாகக் கட்டப்படச் செய்தவையே இந்த பிரமிடுகள். இவை எண்ணிக்கையில் சுமார் 300 க்கும் மேற்பட்டவைகளாக தனது நெஞ்சை நிமிர்த்தி நின்றாலும் அவையாவும் மன்னர் தங்களது தனிநபர் விருப்பமானவற்றையோ அல்லது தன் இன மக்களின் விருப்பமானவற்றையோ நிறைவேற்றப்படவே உருப்பெற்றவைகளாகும். இதில் எந்தவித ஐயப்பாடோ மாற்றுக் கருத்தோ இல்லை.

திராவிட நாகரிகச் சின்னமான மொகஞ்சதாரோ, ஹரப்பா நகர அகழ்வில் காணப்பட்ட பொதுக் குளமானது நீள் சதுர அமைப்பில் வரிசையாக சீராக வடிவமைக்கப்பட்ட படிக்கட்டுக்களை நாற்புறமும் கொண்டுள்ளது. மேலும் இருபக்கங்களிலும் ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் தனித்தனியே உடைமாற்றிக் குளிப்பதற்கு தனியறை வசதிகளுடன் அமைக்கப்பட்டும் உள்ளது. இந்தக் குளமானது இன்றைய நவநாகரிக காலத்தையும் விஞ்சும் வண்ணம் நகரின் மையத்தில் அமைந்ததோடு அல்லாது ஆண், பெண் இரு பாலாருக்கும் எந்த அளவு சம உரிமையுடன் பொதுக் குளத்தில் குளிக்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டிருந்தது என்பதையும் இன்றளவும் எடுத்துச் சொல்லிக் கொண்டே இருக்கின்றன. இருபெரும் நாகரிகங்களும் தனது கலைத் திறனையும், செய்நேர்த்தியையும், தொழில் நுட்பங்களையும் அழகுணர்வுடன் ஏக காலத்தில் எடுத்துச் சொல்லி தன் வரலாற்று முத்திரையை மிகமிக ஆழமாகப் பதித்திருந்தாலும், அவையிரண்டும் எந்த எந்த சிந்தனையின் அடிப்படையில் உருவாக்கம் பெற்றுள்ளன என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கதொன்றாகும். ● (தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமகாலக் கண்ணோட்டம்

சுதந்திரப் பறவைகள் - தமிழீழம்

அண்மையில் பரபரப்பான பத்திரிகைச் செய்தி ஒன்று, யாழ்நகரின் இரண்டாம் குறுக்குத்தெருவில் இடிந்த கட்டிடங்களின் நடுவே குழந்தையொன்று அநாதரவாகக் கிடத்தப்பட்டிருந்ததாகவும், இந்நிகழ்வோடு சம்பந்தப்பட்டவர் என்று சந்தேகிக்கப்பட்ட பெண் ஒருவரும் அக்குழந்தையும் பின்பு பொது மக்களால் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பதுமாகும்.

காவல்துறையிடம் அப் பெண்மணி உண்மையை ஒத்துக் கொண்ட பொழுது, காவல்துறை அப் பெண்மணியையும் குழந்தையையும் மகளிர் நீதி நிர்வாகப் பிரிவிடம் ஒப்படைத்தது. மகளிர் நீதி நிர்வாகப் பிரிவு, தாய்க்கும் குழந்தைக்குமுரிய பராமரிப்பை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு, இத்தாயினுடைய அசாதாரண முடிவுக்குக் காரணங்களை ஆராய்ந்தது.

ஏற்கனவே நாலு பிள்ளைகளின் தாயாக இருக்கும் இவர் ஏறக்குறைய ஐந்து வருடங்களுக்கு மேலாக கணவனைப் பிரிந்து வாழ்கிறார். தனது முதல் மூன்று பிள்ளைகளையும் பராமரிக்க முடியாத நிலையில் மதஸ்தாபனங்களிடம் ஒப்படைத்திருந்தார். தான் வளர்த்து வந்த கடைசிப் பிள்ளையையும் தனக்கு அறிந்த நம்பிக்கையான ஒரு குடும்பத்திடம் அண்மையில் ஒப்படைத்து விட்டார்.

இப்பொழுது ஒரு குழந்தையை மடியில் வைத்திருக்கிறார். ஆறாகப் பெருகும் அன்னையின் கண்ணீரில் அக் குழந்தை குளித்துக்கொண்டிருக்கிறது. ஏனெனில் அக்குழந்தையினுடைய தந்தையை அவள் மட்டும்தான் அறிவாள், உலகம் அறியாது. ஊருக்குச் சொல்லவும் அவள் வெட்கப்படுகிறாள். சொன்னாலும் உலகறிய, அவன் அவளை ஏற்றுக் கொள்ள முன்வரப்போவதில்லை.

தந்தை பெயர் அறியாத அப் பிள்ளை தாய் பெயரையும் அறியாமல் எங்கோ வளரட்டும் என்று நினைத்தாள் போலும் அப்பெண்?

மேற்குறிப்பிட்டது ஒரு பெண்ணினுடைய கதை. இதேபோன்று படுகுழிக்குள் வீழ்ந்துவிட்ட பல பெண்களுடைய கதைகளை நாமறிவோம். அவர்கள் எடுத்த முடிவுகளோ இதைவிடக் கோரமானவை. அதாவது அந்தத் தாயினுடைய உதிரம்தான் அந்தக் குழந்தைக்கு உயிர் கொடுத்தது. அவளினுடைய இதயம் துடிக்காவிட்டால், அந்தச் சிசுவின் இதயம் துடித்திருக்கமாட்டாது. அதற்கு இதயத் துடிப்பு வந்ததே இவளால்தான். ஆனால் குழந்தை பிறந்ததும் இதயமே இல்லாமல் அப்பெண் சிசுவின் குரல்வளையை நசித்துக் கொன்றுவிடுகிறாள்.

இந்த நிகழ்வும் எமது மண்ணில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. பெண்களுடைய இந்த அவல வாழ்வு தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இதுவரையில் அரசு சார்ந்தோ, அரசு சார்பற்றோ பெண்விடுதலை பேசுகின்ற அமைப்புகள், ஆண் பெண் சமத்துவம், ஜனநாயகம் பேசுகின்ற அமைப்புகள் எதுவும் பொருளாதார சமூக வாழ்வில் அடிமட்டத்தில் வாழும் பெண்களின் இப்பிரச்சினையை ஆராய்ந்தது கிடையாது. ஆராய முற்பட்டதுமில்லை.

மேற்கண்டவாறு பாதிப்புக்குள்ளான பெண்கள் பல மட்டங்களில் உள்ளனர்.

1. திருமணத்துக்கு முன்பாகவே இத்தகையை பாதிப்புக்குள்ளாகியவர்கள்.
2. திருமணவாழ்வு முடிவடைந்த பின்பு இத்தகைய பாதிப்புக்குள்ளாகியவர்கள்.
3. கணவர் தூரதேசம் சென்று நீண்டகாலம் பிரிந்து வாழும் நிலைக்காளானவர்கள்.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது சாதியம், சீதனம் போன்ற பேய்கள் திருமணவாழ்வில் குறுக்கிடுதல் பெண்களின் இவ் அவல நிலைக்குக் காரணம் போல் தெரியலாம். இவை உண்மையானதே. ஆயினும் இவற்றுக்கும் மேலாக, குடும்ப வாழ்வைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிதைத்துச் சின்னாபின்னப் படுத்துகின்ற இன்னொரு விடயம் இருப்பதை நன்கு ஆழமாகப் பார்க்கின்ற பொழுது நாம் தெரிந்துகொள்ள முடியும்.

சாதியம், சீதனம் என்பவற்றின் குறுக்கீடுகளை உடைத்துக் கொண்டு திருமணம் செய்து கொண்ட தம்பதிகளும் இவற்றின் குறுக்கீடுகள் இன்றி சாதாரணமாகத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளும் கூட, குடும்ப வாழ்வு சிதைந்த நிலையில் நடுத்தெருவில் நிற்பதையும், இங்கு நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்ற சிசு அழிப்பு நடவடிக்கையில் மேற்கண்ட குடும்ப வாழ்வு சிதைக்கப்பட்ட பெண்கள் ஈடுபட்டிருப்பதையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே குடும்ப வாழ்வில் பங்கேற்கின்ற ஆண், பெண் உறவு நிலை என்பது சமூக மட்டத்திலும் குடும்ப மட்டத்திலும் இங்கு ஆராயப்படவேண்டிய ஒன்றாக உள்ளது.

மனித நாகரிக வளர்ச்சியில் ஆண் பெண் குடும்ப உறவு, குடும்ப அமைப்பு என்பதும், காதல் ஒழுக்கம் என்பதும் மிக உன்னத இடத்தைப் பிடித்திருந்தாலும், நடைமுறையில் இதுவரை காலமும் குடும்ப அமைப்பில் பெண் என்பவள் ஒரு அடிமைப் பாத்திரத்தையே வகித்து வந்திருக்கிறாள். குடும்ப அமைப்பென்பது ஆணினுடைய அதிகார உறவின் அடித்தளத்தில் கட்டப்பட்டிருந்தது. "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" போன்ற பழைய சித்தாந்தங்கள் பெண்களைக் கட்டிப்போட்டிருந்தன.

கால மாற்றம் பெண்ணடக்குமுறை இறுக்கத்தில் மெதுவாக வெடிப்புக்களை ஏற்படுத்தியது. நவீன காலத்தின் தேவை என்பது பெண்களின் வாழ்வு முறையை மாற்றியமைத்தது. பழைய சித்தாந்தங்களும் கோட்பாடுகளும் பெண்களை வழிநடத்த முடியாமல் போயின. இவற்றின் துணையோடு குடும்பத்தை நிர்வகித்து வந்த ஆணின் அதிகாரமும் அங்கே செயலற்றுப் போகிறது. இந்த நேரத்தில் குடும்ப அமைப்பு, குடும்ப உறவு சிதைந்து சீர்குலைந்து போகாமல் இருப்பதற்கு, குடும்பத்தை நிர்வகிப்பதற்கு அங்கே தேவையானது ஆண் பெண் இருவருக்குமிடையிலான அன்பு உணர்வும் புரிந்துணர்வுமாகும்.

இந்த அன்பு உணர்வும் புரிந்துணர்வும் விருத்தியடைவதற்கு வழியில்லாதவிடத்து குடும்ப உறவில் ஆழமான பிளவு, பிரிவு ஏற்பட்டுவிடுகிறது. இவ்வாறு குடும்ப உறவு உடைந்து வெளியேறுகின்ற பெண்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ளவதற்குப் போதிய சமூக விஞ்ஞான அறிவோ, மனித உளவியல் அறிவோ, ஆண் பெண் பாலியல் சம்பந்தமான அறிவோ, சுயசார்பு பொருளாதார அடிப்படையோ இல்லாததால் ஆண்களிடம் ஏமாந்து விடுகிறார்கள். அநாகரிகமாக நடந்து கொள்கிறார்கள்.

பெண்களின் நிர்க்கதியான நிலைக்கு குடும்பத்தில் ஆணினுடைய பொறுப்பற்ற தன்மையும், அக்கறையீனமும், எல்லை மீறிய அதிகாரமுமே காரணமாக இருப்பதுமல்லாமல், சமூக மட்டத்திலும் சமுதாய நல நோக்குடையவர்கள் அல்லாமலும் சுயநலமானவர்களாகவும், தப்பிச்செல்லும் மனோபாவம் உள்ளவர்களாகவும் நடந்துகொள்ளும் ஆண்களால் தான் மேலும் மேலும் பெண்கள் இன்னலுக்குள்ளாகிறார்கள். இத்தகைய அநாகரிகமான பிற்போக்குத் தனமாக நடந்துகொள்ளும் ஆண்களை சமூகம் நிச்சயமாக கண்டிக்கவோ, தண்டிக்கவோ தயங்கக்கூடாது. இதனைச் சமூகம் செய்யாது ஆணுக்குச் சார்பாக நடந்துகொள்கிற பொழுது, சம்பந்தப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைப்பதில்லை. எனவே தனது அநாகரிக உறவை உலகிற்கு அம்பலப்படுத்தும் அவமானச் சின்னமாக தனக்குக் கிடைத்த சிசுவை அவள் நினைக்கிறாள். அதனை அழிக்க முயல்கிறாள்.

இந்த அநாகரிக ஆண் பெண் உறவுகள் பெண்களின் அவலங்கள் என்பன மனித நாகரிகத்தில் உயர்ந்த குறிக்கோளை எய்தும் நோக்கில் அமைந்த குடும்ப அமைப்பின் உடைவின் நேரடி விளைவுகள் எனக் கருதவே இடமுண்டு.

எனவே இத்தகைய பிற்போக்கு நிலையைக் களைய தமிழீழப் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் கடப்பாடு உண்டு.

எமது தமிழீழக் குழந்தைகளின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு அடித்தளம் இடும் குடும்ப உறவு பாதுகாக்கப்பட வேண்டுமாயின் காலத்தின் தேவையையும் பெண்களின் மன எழுச்சியையும் புரிந்து கொண்டு, ஆதிக்க மனோபாவத்தைக் கைவிட்டு செயல்படுகின்ற அவசியம் ஆண்களுக்கு இருப்பதை மறுக்கமுடியாது.

ஆண் பெண் இருவரையும் பேதங்கள் காட்டி ஒன்றுக்கொன்று முரண்பட்ட சக்திகளாக வளர்த்தெடுக்காமல், ஒன்றோடு ஒன்று இணைந்து செல்லக்கூடிய வகையில் சம உரிமை உடையவர்களாக வளர்த்தெடுத்தல் சமூகத்தின் கடமையாக இருப்பதோடு, இவ்வாறு பாதிப்புக்குள்ளான பெண்களினதும் அவர்களது குழந்தைகளினதும் வாழ் நிலையை உயர்த்துவதற்கு பாடுபடவேண்டியது சமுதாயத்தின் கடமையாகும்.

இச்சமூகம் பாரிய மாற்றத்தை வேண்டி நிற்கும் இக்கால கட்டத்தில், மாற்றத்தின் பாதையில் அடி எடுத்து வைத்துவிட்டு திசை தெரியாது படு குழிக்குள் வீழ்ந்து விட்ட பெண்களை, சரியான திசை காட்டி தம்மோடு அழைத்துச் செல்வது மட்டுமல்லாது, பெண்களுக்கிழைக்கப்படும் சமூக அநீதிகளுக்கெதிராகவும், அடக்குமுறைகளுக்கெதிராகவும் பெண்களே விழிப்புணர்வு பெற்று கிளர்ந்தெழ வேண்டும்; ஒன்றிணைந்து போராட வேண்டும்; ஒரு புதிய அடித்தளத்தை உருவாக்க நடந்து கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தோடு தம்மை இவர்கள் இணைத்துக் கொள்ள வேண்டும். இதுவே ஆண் பெண் சமத்துவத்தை நிறுவக்கூடிய நடைமுறைக்குச் சாத்தியமான பாதையாகும்.

சுதந்திரப் பறவைகள்
தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- தமிழீழ ஆய்வு நிறுவனம் -

# கைத்தொழில் பிரிவு

தமிழீழத்தைப் பொறுத்தவரையில் இதன் பொருளாதாரத்துறையில் விவசாயம் முக்கிய பங்கு வகித்தாலும் விவசாயம், கடற்றொழில், கால்நடை இவை சார்ந்த கைத்தொழிலை வளம்படுத்தலிலும், உள்ளூர்வளங்கள் இனங்காட்டப்பட்டு அவை தொடர்பான கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுதலிலும் அத்துடன் சகல உள்ளூர் உற்பத்தியாளர்களையும் ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களை சந்தித்து அவர்களுக்கு அவ்வப்போது நடைமுறைச் சிக்கல்களைத் தீர்த்து வைத்தலையும் தனது நோக்காக கொண்டுள்ளது.

கைத்தொழில் பிரிவை பொறுத்தவரையில் யுனிடெக் பொறியியல் நிறுவனம் நல்ல முறையில் செயற்பட்டு வருகின்றது. அத்துடன் பல ஆய்வுகளை செய்து பல புதிய பொறி வடிவங்களைத் தயாரித்து வருகின்றது.

இவ்வகையில் மனித வலுவைப் பயன்படுத்தி இலகுவான முறையில் இயங்கக்கூடிய இருவழிக் கைப்பம்பி ஒன்றை வடிவமைத்துள்ளது. எஸ்லோன்பைப், மரம், இரும்பு போன்றவற்றை கொண்டு வடிவமைக்கப்பட்ட பம்பி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இப் பம்பி 28 அடி ஆழம் உள்ள கிணற்றில் இருந்து நீரை இலகுவாக இறைக்கவல்லது. சிறு தோட்டங்கள், வீட்டுப் பாவனைக்கு இதைப் பயன்படுத்தக் கூடியதாகவுள்ளது.


சைக்கிள் சில்லின் மூலம் இயங்க வைக்கக்கூடிய மாவரைக்கும் கருவி ஒன்றும் தயாரிக்கப் பட்டுள்ளது. இதேபோன்று நெல் உமி நீக்குதல், தூள் அரைத்தல் என்பவற்றிற்கும் வேறு வேறு கருவிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இக் கருவிகளின் மூலம் குடிசைக் கைத்தொழிலை ஊக்கப் படுத்துவதுடன், மக்கள் தங்கள் சொந்த வீட்டுத்தேவைகளுக்கும் எரிபொருளை நம்பியிராது மனித வலுவின் துணைகொண்டு எளிதாக இவ் வேலைகளைச் செய்ய இக் கருவிகள் உதவியாக இருக்கின்றன. இக்கருவி ஒரு கிலோகிராம் பொருளை 20 நிமிடத்தில் அரைக்க வல்லது.

காகித ஆலைக்கு தேவையான கூழாக்குதல் தேவைக்கு பயன்படுத்தும் கருவி ஒன்றும் இந் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.



இரு வழிக் கைப்பம்பி

மாடுகளின் துணைகொண்டு இக் கருவியை இயக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



சைக்கிள் சில்லின் மூலம் இயங்கவைக்கக்கூடிய மாவரைக்கும் இயந்திரம்

இக் கருவியால் வைக்கோல், இறுங்குப் புல், பழைய கடதாசிகள், வாழைத்தடல் போன்ற பொருட்களை கூழாக்குவதற்கு இதனைப் பயன்படுத்தலாம். மேலும், மரமுந்திரிகைப் பருப்பை பிரித்தெடுக்கும் கருவியும் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கருவி வன்னி, மன்னார் பகுதிகளில் உள்ள மரமுந்திரிகைத் தோட்டங்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

அத்துடன், தும்புத்தொழில், வடமாகாணத்தில் வெற்றிகரமாகச் செய்யக்கூடிய கைத்தொழிலாகையால் தும்பைப் பதப்படுத்துவதற்கான இயந்திரம் உருவாக்கப்பட்டு, அலம்பில் பகுதியிலுள்ள தும்பு தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் பல இடங்களில் இவ் இயந்திரத்தை நிறுவுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றது. இவ் இயந்திரத்தின் மூலம் இவ் உற்பத்தியை விரைவுபடுத்தி தும்பு உற்பத்தியை அதிக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

ரிக்கச் செய்யலாம். தும்புத்தொழிலை வளர்த்தெடுப்பதன் மூலம், தமிழீழத்திலிருந்து தெற்கிற்கு செல்லும் 4 1/2 கோடி ரூபாவை மிச்சப்படுத்துவதுடன் அனேகமானோர்க்கு தொழில்வாய்ப்பினையும் வழங்கமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வட தமிழீழத்தைப் பொறுத்தவரையில் அனேகமான எண்ணெய் வித்து வகைகள் எதற்கும் பயன் படாமல் வீணாக சேதமாகின்றன. இதை பிரயோசனப்படத்தக்க வகையில் எண்ணெயாக்குவதன் மூலம் உணவுத் தேவைகள், சோப் உற்பத்தி, வாகன எரிபொருள் என்பவற்றிற்கு பயன்படுத்தும் நோக்குடன் வேம்பு, ஆமணக்கு, இலுப்பை போன்ற விதைகள் ஒவ்வொரு கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம் சேகரிக்கப்பட்டு செக்கிலிட்டு எண்ணெய் பிரித்தெடுக்கும் வேலைகள் நடைபெறுகின்றது. இதன் மூலம் பலருக்கு தொழில்வாய்ப்பை வழங்கக்கூடியதாக உள்ளது.

மேலும், தைத்த ஆடைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதனாலும், பல வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள பெண் பிள்ளைகளுக்கு தொழில்வாய்ப்பை வழங்கும் நோக்கத்துடனும் கொக்குவில், பண்டத்தரிப்பு, கிளிநொச்சி போன்ற இடங்களில் தையல் நிலையங்கள் நிறுவப்பட்டு இங்கு 25 -30 பெண் பிள்ளைகளுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் எமது தொழிற்சாலையில் இதுவரை பயன்படுத்தப்படாதிருந்த விவசாயக் கழிவுப் பொருளான சணல் மூலம் பலவிதமான நூல் வகைகள், அலங்காரப் பொருட்கள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றதுடன் பத்திற்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பிபினைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். மேலும், இவ்வளவு காலமும் வீண்விரயமான மிருகத் தோல்களைப் பதனிட்டு





தையல் பயிற்சி நிலையம்

தோல்பொருட்கள் உற்பத்திசெய்வதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றது.

அடுத்து, யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள தளிர் காகித ஆலை மூலம் 16 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இங்கு உற்பத்தியான காகிதங்களைக் கொண்டு 2,000 நாட்காட்டிகளும் 100 மேசை நாட்காட்டியும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், யாழ். காமாட்சியம்மாள் இரும்புத் தொழிற்சாலை மூலம் 17 பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இங்கு கழிவு இரும்புகளின் மூலம் கத்தி, உழவாரம், துருவு அலகு, அரிவாள், மண்வெட்டி, புல்லுக் கொடுவா, குப்பைவாரி, பூட்டுக்கள், தெளிகருவி போன்றவை தரமான முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் தற்போதைய பொருளாதாரத் தடை காரணமாக தெற்கில் இருந்து கொண்டுவர முடியாத பொருட்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் இயங்காது இருந்த கைத்தறி நெசவு நிலையங்களை இயங்க வைப்பதற்கான முயற்சிகளிலும் இறங்கியுள்ளோம். இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைப் பொறுத்தவரையில் அங்குள்ள வளங்களைக் கண்டறிந்து பரீட்சார்த்தமாக பல சிறு கைத்தொழில் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் இவை சார்ந்த குடிசைக் கைத்தொழில் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கப்படுவதன் மூலம் எமது சுயசார்புப் பொருளாதாரத்தினை வளர்த்தெடுக்க முடியும் என்பது எமது எண்ணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறு கதைகள்

3

# உண்மைகள்

வளவைவள்வன் -

காப்பரண், தமிழீழம்



முகுந்தன், யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தான். காலின் தொடைப் பகுதியில் ஒரு பெரிய கட்டுடன் அந்தக் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தான். அவனுடைய தாய் அருகில் இருந்து விசிறியால் விசிறிக் கொண்டிருந்தாள். தந்தை ஏதோ வாங்கி வருவதற்காக வெளியே சென்றிருந்தார்.

அவன் அந்த நீண்ட அறையில் மற்றக் கட்டில்களில் கிடத்தப்பட்டிருந்த ஏனையோரைத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். காயப்பட்டவர்கள் மட்டுமே அந்த அறையில் இருந்தார்கள். மருத்துவ மனையில் இப்படிப் படுத்திருப்பது முகுந்தனுக்கு ஓர் புதிய அனுபவம். அங்கு காற்றோடு கலந்து வந்த மருந்து மணம் அவன் சுவாசத்திற்குப் புதியது.

"தம்பி கால் நோகுதே. காலை அங்காலை, இஞ்சாலை அசைக்க வேணாம். காயம் மாறிடும். கெதியா வீட்டை போயிடலாம்."

அவனின் தாய் அவனுக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள். அப்படி கூறும் வேளைகளில் தாயின் கண்கள் பனித்திருப்பதை அவன் கண்டான்.

அவன் கால்களை அசைக்கும்போது கடுமையாக வலி ஏற்பட்டது. எனினும் அதைப்பற்றி அவன் அதிகம் யோசிக்கவில்லை. அன்று நடந்த அந்த சம்பவத்தை மீண்டும் மனத்திரையில் ஓடவிட்டுக் கொண்டிருந்தான்.

தனது தந்தையுடன் கொழும்பிற்கு சென்றுகொண்டிருந்த வழியில். வவுனியாவில் வைத்துத் தான் அந்த நிகழ்வு நடந்தது.

நொச்சிமோட்டையில் மூன்று நாட்கள் தங்கியிருந்துவிட்டு அன்றுகாலை வவுனியா இராணுவ சோதனைக் கடவையைக் கடந்து செல்ல வரிசையில் நின்ற பயணிகளுடன் அவனும் தந்தையும் நின்றிருந்தனர். பத்துப் பத்துப் பேர்களாக கடந்துசெல்ல இராணுவம் கட்டளையிட்டிருந்தது. அப்போதுதான் அது நடந்தது.

ஒரு இராணுவச் சிப்பாய் வரிசையில் நின்ற பயணிகளை நோக்கி படபடவெனச் சுட்டான். கிட்டத்தட்ட நான்கு பேர் அந்த இடத்திலேயே வீழ்ந்தனர். பலர் காயங்களுடன் திரும்பி ஓடி வந்தனர். முகுந்தனின் தொடையில் ஒரு தோட்டா பாய்ந்திருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குருதி வழிந்தது. வலி தாங்க முடியாமலிருந்தது. நோயாளி வண்டியொன்றின் (அம்புலன்ஸ்) மூலம் காயப்படுத்தப்பட்டவர்கள் யாழ் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர். முகுந்தனும் அவ்வாறே கொண்டு வரப்பட்டான்.

வவுனியாவில் தினசரி நடக்கும் நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகளில் பார்த்திருந்தும் முகுந்தனை அவனது தந்தை அவசரப்பட்டு கொழும்புக்கு அழைத்துச் செல்ல முற்பட்டமைக்கு காரணமுண்டு.

சமீபகாலமாக முகுந்தனிடம் காணப்பட்ட சில நடவடிக்கைகள் அவனின் தந்தைக்குப் பிடிக்கவில்லை. அவனை உடனடியாக கொழும்புக்குக் கொண்டு சென்று கனடாவில் இருக்கும் அவனது மூத்த சகோதரனிடம் அனுப்பிவிட வேண்டுமென்று அவர் ஆசைப் பட்டார்.

தந்தைக்குப் பிடிக்காத முகுந்தனின் நடவடிக்கைகள் இவை தான்.

பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவரும் நினைவஞ்சலியை கவனமாக அவன் படிப்பான். புகைப்படங்களை வெட்டி எடுத்து சேகரிப்பான். விடுதலை கீதங்களை அடிக்கடி முணுமுணுப்பான். வீதிகளில் செல்லும் போராளிகளை ஆர்வத்துடன் பார்ப்பான். கையசைப்பான்.

அவனுடைய இந்தச் செய்கைகள் தந்தைக்குப் பிடிக்கவில்லை.

போராட்டத்தைப் பற்றியும், சிங்கள இராணுவம் தமிழ் மக்களைச் சுடுவது குறித்தும் தனது தந்தையிடம் அடிக்கடி துருவித் துருவிக் கேள்விகள் கேட்ட வண்ணமிருப்பான் அவன்.

"நாங்கள் பேசாமலிருந்தால் ஆமி ஒன்றும் செய்யமாட்டான். 'இந்தப் பொடியள்' மாதிரி துவக்கை எடுத்துக் கொண்டு திரிந்தால் தான் ஆமி சுடுவான். படிக்கிற பிள்ளைகளை ஆமி சுடாது. இப்படிப் 'பொடியளின்ர' படங்களை வைத்திருந்தால்தான் சுடுவான்."

பன்னிரண்டு வயது மகனுடைய கேள்விகளுக்கு அந்தத் தந்தை இப்படித்தான் பதில் சொல்லுவார்.

பத்திரிகைகளைப் படிக்க விடமாட்டார். "இதை விட்டுப் போட்டு பாடத்தை எடுத்துப் படி" என்பார். அவன் வெட்டி வைக்கும் படங்களை எல்லாம் எடுத்து கிழித்தெறிந்து விடுவார்.

அன்று வவுனியாவில் நடந்த நிகழ்ச்சி தனது தந்தை தனக்குக் கூறியதெல்லாம் பொய்யானவை என்பதை முகுந்தனுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். தந்தை சொன்னவற்றையும் அன்று நடந்த நிகழ்ச்சியையும் நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

சாப்பிடுவதற்கு 'பிஸ்கற்' வாங்கி வந்த தந்தையின் கையிலிருந்த பத்திரிகையை முகுந்தன் எடுத்தான். தந்தையின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

"அப்பா அன்றைக்கு நாங்கள் சும்மாதானே நின்றோம். துவக்கு வைத்திருக்கவில்லையே! ஆனால், ஏன் எங்களை ஆமி சுட்டான்?"

தந்தை பதில் சொல்லவில்லை, அவரால் பதில் சொல்லத் தெரியவில்லை.

"தம்பி இந்தா பிஸ்கட்டைச் சாப்பிடு", என்று பிஸ்கற்றைக் கொடுத்தார்.

பத்திரிகையில் இருந்த போராளிகளின் நினைவஞ்சலிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். பின்னர் ஒரு பிளேட்டினால் அவற்றை வெட்டி சேகரிக்கத் தொடங்கினான்.

தந்தை அதனைத் தடுக்க முற்படவில்லை. பேசாமல் பார்த்துக் கொண்டேயிருந்தார். தனது பொய்களை அந்தச் சிறுவன் இனிமேல் நம்பமாட்டான் என்று எண்ணியிருப்பாரோ என்னவோ.....!

❋

ரவி எழும்பனையா, எழும்பி முகத்தைக் கழுவு. தங்கச்சியாக்கள் எழும்பமுன்னம் இந்தக் கஞ்சித் தண்ணியைக் காய்ச்சிப்போட்டு நானொருக்கால் விதானையார் வீட்டையெல்லே போகவேணும்." என்று அடுக்களைக்குள்ளிருந்தவாறு குரல் கொடுத்தாள் கனகம்.

ரவி சோம்பல் முறித்துக் கொண்டு மெல்லச் சிணுங்கியவாறு எழுந்து நடந்தான்.

இடுப்புக்குமேலே தோலைப் பிய்த்துக் கொண்டு வெளியேவரக் கங்கணம்கட்டிக் கொண்டிருந்த எலும்புக் கோர்வை கனகத்தின் கண்களில் பட்டுக் கொள்ள......... என்ன செய்வது...... குறுக்கால போன ஆமிக்காறனாலை......... அந்த மனுசன் இப்பிடி அநியாயமாகச் செத்திருக்காட்டில் இப்ப என்னமாதிரி இந்தக் குஞ்சுகளைப் பட்டினி போடாமல் பார்த்திருப்பன். போயும் போயும் இந்த நாட்டிலை தமிழராகப் பிறந்து நாங்கள் படுகிற துன்பங்கள்....... கனகம் பானையைக் கிளறிக் கொண்டு மனத் துயர்களை அடக்கினாள்.

உலை முகத்தில் பொங்கியெழுந்த நுரையை முந்திக் கொண்டு அவள் மனதில் பொங்கி வந்த துயரைப் புரிந்து கொள்வது யார்?

கனகத்தின் விழிகளில் நீர்த்திவலைகள்.

அம்மா....... பசி......க்குது....... குழந்தை ரமேஸ் எழுந்த இடத்திலிருந்தவாறே தன் குரலை வெளிப்படுத்தினான்.

கனகம் கஞ்சிப்பானையை இறக்கிவைத்துவிட்டு ரமேஸ் இருந்த இடத்திற்கு வந்து விட்டாள்.

பொள்ளல் விழுந்த அந்தப் பாயில் திக்கொருவராக நாலு குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தன.

நடுவே இருந்த ரமேசின் முகத்தில் நெற்றிப் பரப்பிலிருந்து கழுத்து பூராவும் வியர்வைத் துளிகள் முளை கொண்டிருந்தன.

அம்மா........ ப....சி...க் சொல்ல முடியாது சொல்லித் தாயின் மடியில் சாய்ந்தான் ரமேஸ்.

கனகத்தின் கண்களில் கண்ணீர்ப் பூக்கள் பொல பொலத்துச் சொரிந்தன.

இரவு சாப்பிடாமல் கிடந்த பிள்ளைக்குப் பசிக்களை...... அதுதான் இப்படி வியர்க்குது...... ரவியைக் கூப்பிட நினைத்த கனகம் ஏதோ நினைத்தவளாக 'இரையாவாறன்' என்றுவிட்டு எழுந்து சென்று துணி ஒன்றை நீரில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நனைத்து இலேசாகப் பிழிந்து விட்டு, கொண்டு வந்த அந்த ஈரத் துணியால் ரமேசின் முகத்தையும் உடலையும் துடைத்து விட்டாள். பின் தன் முந்தானைச் சேலையால் அந்த ஈரம் போகும் வரை உரசித் துடைத்தாள்.

"கஞ்சி ஆறட்டும் பிள்ளைக்குக் குடிக்கத்தாறன்...... என்று செல்லமாகக் கூறி ரமேசின் உச்சியை மோர்ந்து விட்டு, கஞ்சியைப் பெரிய சட்டி ஒன்றில் ஊற்றினாள் கனகம்.

கஞ்சி ஆறட்டும்.......

ரமேஸ் கஞ்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். கனகம் மற்றக் குழந்தைகளையும் ஒவ்வொன்றாக எழுப்பி முகம்கழுவித் துடைத்துக் கொண்டுவந்து எல்லோருக்கும் ஒவ்வொரு ஏனங்களில் வார்த்துக் கொடுத்தாள்.

"அப்படிச் சொல்லாத அண்ணா வருவான்"

"பின்னை ஏன் அழுகிறாய்....... அண்ணனை எங்கேயெண்டு சொல்லு நான் போய் கூட்டி வாறன்.

நாலு வருசத்துக்கு முன் நடந்த சம்பவங்கள் ஒரு கணம் மனதில் தோன்றி மறைய......

"இஞ்சை வா ராசா...... இப்ப ஏன் உனக்கு கிழமை..... நான் ஒருக்கால் விதானை வீட்டை போயிட்டு வரவேணுமல்லே...." கனகம் இழுத்து கதையின் திசையை மாற்றினாள்.

ரவி சிரித்துக் கொண்டே வந்தான். "அம்மா நிவாரணக் காட்டுக்குத்தானே போறியள்?"

ஓமய்யா அதையெண்டாலும் வாங்கினால்தானே உங்களுக்குப் பசிக்காமல் நான் சமைச்சுத்

ரவியும் ஏனைய குழந்தைகளும் அந்தக் கஞ்சியை ஊதி ஊதி வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தனர்.

கனகம் பலவித சிந்தனைகளையும் சுமந்தவாறு எட்டி மிதித்து நடந்து கொண்டிருந்தாள். சனம் அதிகம் வந்து கூடிவிட்டு தெண்டால் நேரத்தோடை வர ஏலாது என்ற அச்சம் மேலோங்க அவள் சென்று கொண்டிருந்தாள்.

முந்தின காலங்களிலை புருசனில்லாதவைக்கு பிச்சைக் காசுக்கெண்டு ஒரு காட் கொடுக்கிறவை. அந்தக் காட்டுக்கு மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு விதானைப் பிரிவிலை 20 பேருக்கு மேலை இருக்காது. இப்ப அப்படியே...... ஆயிரம் நூறெண்டு சுட்டும், குண்டு போட்டும், செல்லடிச்சும் எல்லாவழியாலும் சாக

புவி - சாரளம், தமிழீழம்

# பசி

ரவி கிணற்றடியை விட்டு இன்னமும் வரவேயில்லை. அவன் எதையோ யோசித்தவாறு நின்றான்.

உப்பிடித்தான் மூத்தவன் சதீஷம் நிண்டுபோட்டு போயிட்டான். கனகம் எட்டி எட்டி மகனைப் பார்த்தவாறே சிறுசுகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

ரவி இன்னமும் வந்தபாடாயில்லை......... "அம்மா இண்டைக்கு என்ன கிழமை?" ரவிதான் கேட்டான்.

"இவனுக்கு இப்ப என்ன தேவை வந்தது. வெள்ளிக் கிழமையிலதானே போக்கறப் போன வங்கடை செல் பட்டு அந்த மனுசன்..... ம்...."

அன்று, "அண்ணா எங்கயம்மா போட்டுது -நீ ஏன் அழுகிறாய்? அண்ணாவும் அப்பா போன மாதிரி போட்டுதே!"

தருவன். பால்மாவும் தருவாங்களாம்..... நீ தம்பி தங்கைச்சியோட இருந்துகொள் நான் ஓடிப் போய் ஓடியந்துடுவன் என்ன......?"

"..............."

கஞ்சியைக் குடிச்சுச் சொன்னான் ரவி "குண்டாலையும் செல்லாலையும் ஆட்களைச் சாக்காட்டிப் போட்டு நிவாரணம் தாறான் நிவாரணம்....... நீங்கள் பாஞ்சு விழுந்து வாங்குங்கோ......."

மனதில் ஏதோ ஒரு வைரத்தின் தாக்கமாக அவன் வார்த்தைகள் வெளிப்படுவதாக கனகம் உணர்ந்து கொண்டாள்.

கனகம் ஒருவாறு மனதைத் தேற்றியவாறு கொய்யகச் சேலையை இழுத்துவிட்டு முந்தானைச் சேலையை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்தவாறு புறப்பட்டுவிட்டாள்.

டிச்சுப்போட்டு....... சின்னப் பிள்ளையெண்டாலும் ரவி கேட்ட தன் நியாயம் இப்போதுதான் அவளிடம் பூதாகாரமெடுத்தது.

"ஆக்களை செல்லாலையும் குண்டுகளாலையும் கொண்டு போட்டு நிவாரணமோ குடுக்கிறாங்கள்"

சே.... எவ்வளவு அர்த்த புஷ்டியான வார்த்தைகள்...... என்ர பிள்ளைக்கு இப்பதான் பத்து வயது. இப்பவே.... இப்படிச் சிந்திக்கிறவனை......

மூத்தவன் சதீஸ் கூட எவ்வளவு கெட்டிக்காரன். அரசாங்கமோ முந்தினது இயக்கமோ முந்தினதம்மா? என்று ஒருதடவை கேட்டுவிட்டு பதிலை எதிர்பாராமலேயே, அரசாங்கங்கள் எல்லாமே எல்லா இனங்களையும் சமமாக நடத்தியிருக்குமானால் எந்த ஒரு நாட்டிலும் புரட்சிகர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்கள் தோன்றியிருக்கவும் முடியாது, போரும் இத்தனை அழிவுகளும் கூட ஏற்பட்டிருக்கா துதானே. விசயம் தெரியாத சனங் கள் இயக்கங்களைத் திட்டிக் கொண்டே இருக்கும் வரை அரசு களும் தங்கடை நாடகத்தை நடத் திக் கொண்டுதானிருக்கும்........

இந்த நாளையிலை சின் னஞ் சிறுசுகளுக்குத்தான் எவ்வ ளவு பெரிய அறிவும்..... சிந்த னையும். எங்கட காலத்திலை நாங்கள் உந்த வயதிலை........ ஓ என்ர செல்வங்களுக்கு இந்த வயதிலை தகப்பனில்லாத பிள் ளைகளாய்ப் போச்சுதுகள்....... கனத்த மனதிலிருந்து வெளிப்பட்ட பெருமூச்சு மெல்ல வெளிப்பட்டுக் காற்றில் கரைந்தது.

அன்று ஒரு வெள்ளிக்கி ழமை மாலைக்கருக்கல் இருள் பூமியை எங்கும் மை வண்ணமாக் கிக் கொண்டிருந்தது. யுத்த காலத்தில் எழுந்த துப்பாக்கி வேட்டொலிபோல நாற்திசையி லிருந்தும் கூவிச் சிதறி வெடித் தன செல்கள்.

நாடு பூராவும் செல்களின் ஆட்டம். நடைபாதை தோறும்..... வீடுகள் தோறும்..... ஓ எத்தனை மனித உடல்கள்...... அங்கமிழந்து உருக்குலைந்து -எங்கும் வெடித் தெறிந்த செல்களின் ஓசை நின் றது. அந்த ஒரு கணத்தில்தான் எத்தனை அவலக் குரல் கள்........ மெல்ல சதீஸ் வெளியே...... பங்கரை விட்டு வெளியே வந்து நிற்கின்றான்.

அடுத்தடுத்த வீடுகளில் அவலக் குரல்கள்..... இதயத் தைப் பிழிந்து கொள்ள மெல்லத் தரையை நீட்டியவாறு பிள்ளைக ளோடு வந்த கனகம்..... "ஐயோ அப்பா....." என்று சதீசின் தீனக் குரல்.... "என்ர ராசா...... எங்க எங்கை ஐயா...." "அம்மா........ அப்பாவின் தலையைக் காணோம்....."

கனகம் மூர்ச்சித்து வீழ்ந்தாள்.

பொழுது விடிந்த மறுநாள் கனகத்தின் புருசனோடு நாலு மனித உடல்கள் சிதையில் நீறின.

கனகத்தின் நெஞ்சில் கன லெடுத்து காற்றோடு காற்றானது.



கண்மூடித்தனமான இலக்கற்ற அரசும், ஆட்சியாலும் இப்படி அபலைகளாக்கப்பட்ட பெண்கள் பிள்ளைகள்.

பெண்களின் தாலியை அறுத்துவிட்டுப் பூக்கூடை நிவார ணப் பரிசளிக்கும் அரசு...... கண்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு கண்ணாடி கொடுக்கும்....... இப் படிப் பித்தலாட்டம் செய்வதுதான் ஆட்சியதிகாரம் -இது மாறாதவரை நாமும் நமது மக்களும் சுண்டைக் காய்கள்தான்.

மகன் சதீஸ் குரலும்...... அந்தக் கோர நிகழ்வுகளும்...... ஒன்றன் பின் ஒன்றாக எழுந்து வந்து கனகத்தைத் தடுக்கும்.

மகன் போராளியாகப் போராடிக் கொண்டிருக்கும் போது..... கேவலம் இந்த அர சின் பிச்சைப் பணத்தையா நீ ஏற் கப் போகிறாய்.

"அரசின் வஞ்சகத்தை வஞ்சகத் தால்தான் வெல்லவேண் டும்"

பழிக்குப்பழி.........

மனதில் ஆயிரம் துப்பாக்கிச் சன்னங்களின் துளைப்பு. கனகம் எந்த அவஸ்தைகளையும் பொருட் படுத்தவேயில்லை.

விதானையார் வீட்டில் ஏதோ..... நாலு ஐந்து பேர் இப் போதுதான் தலை நீட்டிக் கொண் டிருந்தனர்.

"கனகம்...... நீ உதவியில் லாதனி..... தூரம் வா.... வா...."

விதானையாரின் கருணை கன கத்தை விடுவித்துக்கொண்டது.

பிள்ளைகள் எப்படியோ கஞ் சியைக் குடித்துவிட்டுப் பேசாமல் விளையாடுங்கள்....... ஆனால் ரவியின் வார்த்தைகளும் யோச னைகளும்...... கனகம் சிந்த னையோடுதான் நடந்து கொண் டிருந்தாள். கனகத்தின் உடல் வியர்த்துக் கொட்டியது.

கனகம் வீடு வந்து சேர்ந்த போது சிறுசுகள் எல்லாம் கூடி விளையாடிக் கொண்டிருந்தனர்.

கனகத்தின் கண்கள் ரவி யின் தோற்றம் தெரியாதா என்ற ஏக்கத்தில் அங்குமிங்குமாக......

ரவியைக் காணவில்லை.

வீட்டிற்கு உள்ளும் இல்லை...... அடுக்களைப் பக் கம் புகுந்தபோது கஞ்சிப் பானை யருகே பெட்டி ஒன்றுக்குள் ஒரு மடித்த காகிதம்.......

நடுங்கும் கரங்களால் மெல் லக் குனிந்து அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள்.


அம்மா! வருவாயற்ற ஏழை களுக்கு வயிற்றுப் பசி என்ன செய் வது உலகில் எத்தனையோ பசி கள் மனிதனை ஆட்கொண்டு வதைக்கின்றன.

எல்லாவற்றையும் விட முக் கியமானது எங்களது சுதந்திரம் அம்மா, அதனால்தான் நம் நாட்டை மீட்கும் சுதந்திரப் பசி யோடு போராடிக் கொண்டிருக்கும் போராளிகளோடு சேர்ந்து நானும் போராடினால்தான் இந்தப் பசி தீரும். அதுவரை உங்களிடமிருந்து விலகி இருக்கும் மகன்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





எஸ். நவநீதன் - வெளிச்சம், தமிழீழம்.

# வீர வன்னிச்சி

பட பட பட் பட் பட் டம்... தொடர்ச்சியான வெடிச்சத்தங்கள் அதற்கு மத்தியில் பேரிரைச்சலுடன் வானத்தில் வட்டமிட்டு பீப்பாய் குண்டுகளை உருட்டி வீழ்த்தும் 'அவ்ரோ' விமானங்கள், சடசடவென குண்டுமழை பொழியும் இயந்திர வல்லூறுகள், இடையிடையே எங்கிருந்தோ வந்து வெடிக்கும் எறிகணைகளின் அதிர்வோசை.

அவன் வாழும் குமுழமுனைக் கிராமத்தின் அண்மித்த பகுதியில் இருக்கும் அடர்ந்த காட்டுப் பகுதியில், ஸ்ரீலங்கா அரசபயங்கரவாதிகள். சத்தியத்தை அழித்துவிடலாம் என்ற நப்பாசையுடன் முப்படையின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி மின்னல் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தார்கள். இந்த வெடி ஓசையையும் இடியோசையையும் கேட்டு வெலவெலத்து நடுங்கும் கோழையல்ல அவன். எத்தனையோ ஆண்டுகளாக எத்தனையோ தடவைகள் இந்தக் காட்டில் உள்ள புலிகளை வேட்டையாட வந்த இராணுவங்களின் வெடிச்சத்தங்களைக் கேட்டுக் கேட்டுப் பழகிப்போனவன் அவன். இப்போதெல்லாம் அந்தச் சத்தங்களைக் கேட்டு ரசிக்கும் மனோபாவம் பெற்றிருந்தான்.

ஆனால் இன்று இந்த வெடிச்சத்தங்களைக் கேட்டு அவன் நெஞ்சம் பதைபதைத்தது. அந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் நடந்து கொண்டிருக்கும் போரில் தன் மகனும் அரசபயங்கரவாதிகளை எதிர்த்து நிற்கிறான் என்பதாலா இந்த அச்சம்? அவன் மகன் மட்டுமா எதிர்த்து நிற்கிறான், இன்னும் எத்தனையோ போராளிகள் போராடுகின்றனரே, அத்தனை பேருக்காகவும் அல்லவா அவன் கலங்கவேண்டும்? அதற்காக அவன் அச்சப்படவில்லை, பின் எதற்காக...?

அரச பயங்கரவாதிகள் காலை ஐந்து மணிக்கு தாக்குதலை ஆரம்பித்த சமயத்தில், அவனது அன்பு மனைவிக்கு பிரசவ வேதனையும் தொடங்கிவிட்டது. ஈழத்தாயின் துயரினைத் துடைக்க, புலிக்குட்டி ஒன்று இந்தப் பூமியில் குதிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் வேளை. இப்படிப் பயங்கரமான வெடிச்சத்தங்கள்....? பெற்றெடுத்த தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்கவும் பிறந்த மண்ணின் அடிமை விலங்கினை உடைக்கவும், யுத்த முனையில் வீரமறவர்கள். எதிரிகளின் விமானக்குண்டுவீச்சால் செத்துக் கொண்டிருக்கும் வேளை. இங்கே வித்து ஒன்றை முளையாக்க ஒரு தாயின் உள்ளமும் உடலும் தவித்துக் கொண்டிருந்தது. தாய் வயிற்றிலிருந்து விடைபெற்று தாயகத்தைப் பார்க்க வரப் போகும் அந்தக் குழந்தையை வரவேற்க பரிவோடும், பரபரப்புடனும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அந்தக் கிழவி..? அதுதான் அவனுடைய தாய். உதிரும் பருவத்திலும் உதிராத நெஞ்சுறுதியோடு காணப்பட்டாள்.

அடிக்கொருதரம் அடுப்படிப் பக்கம் தன் விழிகளைப் பாயவிட்டபடி முற்றத்தில் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டு நின்றான். முக்கி முனகும் மனைவியின் வேதனை ஒலி ஈனஸ்வரமாக அவன்காதில் விழுந்தபோது அவன் இதயம் படபடத்தது.

"அம்மா, பீப்பா உருட்டிப் போட்டான் ஓடுங்கோ பங்கருக்கை.." பக்கத்துவளவில் யாரோ சிறுவன் அலறும் ஒலி... அப்பொழுதுதான் புறஉலக நினைவு வந்தவன்போல வானத்தை அண்ணாந்து பார்க்கிறான். பேரிரைச்சலுடன் அவ்ரோ விமானம் ஒன்று அவன் வீட்டுக்கு மேலால் பறக்கிறது. அதன் பின்னால்... கறுப்பாக ஏதோ ஒன்று தரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஓடிச் சென்று அடுப்படித் திண்ணையில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டான். அவனது உதடுகள் கண்ணன் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தது.

டமார்... பயங்கர அதிர்வோசை, அதைத்தொடர்ந்து சில வினாடிகள் விஸ்ஸ்... என்ற இரைச்சல் ......கீ...... என்ற ஒலியைத்தவிர அவன் காதுகளுக்கு வேறு எதுவும் கேட்கவில்லை. மெல்ல கண்களைத் திறந்தான். எங்கும் ஒரே புகைமண்டலம். புகையின் ஊடாக எதிரே இருந்த மாலின் ஒரு பகுதி சரிந்து தரையைத் தொட்டுக் கொண்டு நிற்பது, மங்கலாகத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிகின்றது. அவன் இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது.

பதட்டத்துடன் எழுந்து வாசலை நோக்கிச் சென்றவன் ஒரு கணம் தயக்கத்துடன் நின்றான். "அம்மா.... அம்மா....."

உள்ளிருந்து கேட்ட பதில் குரல்.... அவன் உள்ளத்தில் ஒரு பரபரப்பு, முகத்தில் மலர்ச்சி குழந்தையின் அழுகுரல்தான் அது...?

"உள்ள வாமோனை" தாயின் அழைப்பு அவன் காதில் விழுகிறது அவன் உள்ளத்தில் ஒரு பிரமிப்பு இந்த வெடிச்சத்தத்தில் தாய் மயங்கி இருப்பாள் என எண்ணி அவன் பயந்திருந்தான். ஒன்றுமே நடவாதவள்போல் எவ்வளவு சாதாரணமாக அழைக்கிறாள்? கதவைத்திறந்து உள்ளே எட்டிப் பார்கிறான். மெல்ல முனகியபடி மனைவி படுத்திருக்கிறாள்.

பக்கத்தில், அவனது தாயின் கரங்களில் அந்தச் சின்னஞ்சிறு மழலை கை காலை அசைக்கின்றது. உற்றுப் பார்க்கின்றான். ஆண்குழந்தை, தாயின் முகத்தை ஏறிட்டு நோக்கினான். அதில்... கலக்கம் என்பது துளிகூடக் காணவில்லை. கைதேர்ந்த மருத்துவிச்சியின் மனோபாவத்துடன் கடமையில் ஈடுபட்டிருந்தார். மனதிலே ஒரு பெருமிதம். இந்த எண்ணம் கடந்த கால சம்பவங்களை அவன் நினைவுக்குக் கொண்டு வந்தன.

ஏழு ஆண்டுகளுக்கு முன், புலிகள் என்றால் வீட்டைப் பூட்டி வெளியேறும் விளக்கம் புரியாத சனங்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்த சமயத்தில், பேரினவாதிகளின் இராணுவங்கள் ஊருராய்ச் சென்று அடாவடித்தனங்கள் புரிந்த காலகட்டத்தில், அச்சப்படாமல் அன்புடன் அவர்களை வரவேற்று தேவைகளை பூர்த்தி செய்து இரகசியங்களை காப்பாற்றி வந்தவள் அவள் அன்னை. ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கையால் எமது எல்லைப் பிரதேசங்களில், குடி அமர்த்தப் பட்டிருந்த சிங்களக் காடையர்களை விரட்டி அடிப்பதற்கு ஆதரவும், ஆதாரமாயும் விளங்கியது அந்தக் கிராமந்தான். இன்றுவரை எத்தனையோ தடவைகள் இராணுவத்தின் மிலேச்சத்தனமான நடவடிக்கையால் அவ்வூர் மக்கள் இடம்பெயர்ந்து இருக்கிறார்கள்.

பெரிய அளவிலான இராணுவத் தாக்குதல்களுக்கெல்லாம், மூலகமாக விளங்கிய அந்தக் கிராமத்தை சிங்கள இராணுவத்தினர் கொட்டியாமுனை (புலி முனை) என்றே இன்றும் சொல்லுவர்.

"ஐயா... ஐயா..." வெளியே அழைக்கும் குரல் அவன் சிந்தனையை துண்டித்தது. அவசரமாக வெளியே வந்தான். அவனைக் கண்டதும் தெருவில் நின்றிருந்த போராளிகள் இருவரும் உள்ளே வந்தனர். வெடிச்சத்தங்களும் விமானச்சத்தங்களும் ஓய்ந்திருந்தன.

"ஐயா..." சிறிது தயங்கினான். அவன் பின் சொன்னான் "உங்கள் மகன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான் ஐயா...." மலர்ந்திருந்த அவனது முகம் பட்டென வாடியது. துள்ளிக் குதித்த அவன் உள்ளம் துவண்டு சோர்ந்தது.

"பின்னேரம் பூதவுடல் வரும், நாங்கள் போயிட்டுவாறம்" சொன்னவர்கள் திரும்பி நடந்தார்கள்.

அவன் உள்ளத்திலே பெரும் அதிர்ச்சி, பச்சை உடம்போடு படுத்திருக்கும் தன் மனைவிக்கு இதை தெரியப்படுத்தினால் அவள் இதயம் தாங்குமா....? இறைவா எனக்கேன் இந்தச் சோதனை, அவன் உள்ளம் அழுதது...

"இஞ்சை ஒருக்கா வாமோனை" உள்ளே இருந்து வந்த தாயாரின் குரல் கேட்டு, பொங்கிவந்த கண்ணீரை அழுத்தித் துடைத்தபடியே உள்ளே செல்கிறான்.



## தளிரே....!

கருவறை விட்டு வந்ததுமே
இருப்பை தொலைய விட்டாயோ!
பறக்கும் முன்னமே உன்
சிறகை அறுத்தவர்
யார் ?
தேசமே ஓர்
திறந்த வெளிச்
சிறையானதா?
அலைக்கழிக்கும்
இவ்வுலகை
அசைப்போம் வா!

- சாளரம் - (தமிழீழத்திலிருந்து
வெளிவரும் இளையோர்
திங்கள் இதழிலிருந்து)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேராக மனைவி மீது அவன் பார்வை விழுகின்றது. முகத்தில் மெல்லிய புன்னகை தவழ அவனை கண்களால் பக்கத்தில் அழைக்கிறாள். பக்கத்தில் போய் அமர்ந்த அவன், அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்க சக்தி அற்றவனாய் அண்ணாந்து மேலே பார்க்கிறான். கவலையை மறக்க அவன் கண்களால் இயலவில்லை, அது கண்ணீரைச் சிந்துகின்றது.

"இஞ்சருங்கோ, ஏன் இப்ப அழுகிறிங்கள்" தனது வலக்கரத்தை மெல்லத் தூக்கி அவனது விழிகளை ஆதரவுடன் துடைக்கிறாள். "அதை இப்ப நீ அறிந்தால் உன் இதயம் தாங்காது அம்மா" அவளை பரிதாபமாகப் பார்க்கிறான் அவன்.

"இஞ்சருங்கோ எங்கடை ஊரிலை இண்டைக்கு நாங்கள் அச்சமின்றி வாழ்வதற்கு ஆதாரமாய் இருந்த காண்டீபன், லோறன்ஸ், சபா, லலித் இவர்களை இழந்தபோது தாங்கிக் கொண்ட இதயம் என்ரை பிள்ளையை இழந்திட்டால் மட்டும் உடைஞ்சாபோயிடும்" என்றாள் அவள்.

அவன் முகத்தில் மின்னலென ஒரு அதிர்ச்சி வியப்பு மேலிட விழிகளால் அவளைக் கூர்ந்து நோக்குகின்றான். உறுதி என்ற சொல்லுக்கே உறுதி கொடுக்கும் உள்ளம் அல்லவா அவளுடையது.

"ம்... இதெல்லாம் அவன் செயல், ஒண்டை வரவுவைச்சு ஒண்டை செலவு வைச்சிட்டான்" தாயாரின் வாயில் இருந்து வந்த தத்துவம் இது.

மதயானையை பிடித்துக் கட்டிய மாதரசி அரியாத்தா இந்தப் பிரதேசத்தில்தானாம் பிறந்து வளர்ந்தவள். பலர் சொல்லக் கேட்டிருக்கிறான் அவன். அவை உண்மையென உறுதிப்படுத்தும் சான்றுகள் போல் அவன் தாயும் தாரமும் அவன் கண்முன்னே காட்சியளித்தார்கள். தனக்குத் தாயாகவும் தாரமாகவும் கிடைக்கப் பெற்ற அந்த வீர வன்னிச்சிகளை மாறிமாறிப் பார்க்கிறான்.

✻

# விடுதலை அவாவிய பேனா.



பத்திரிகைத் துறையின் தார்மீகப் பொறுப்பை உணர்ந்து தமிழ் மக்களின் சுபீட்சமான, சுதந்திர நல்வாழ்வுக்காக நீண்ட காலமாக கடினமாக உழைத்த ஒரு பத்திரிகையாளனை தமிழுலகம் இன்று இழந்துவிட்டது.

இரத்தின சபாபதி மகேஸ்வர சர்மா என்ற இயற்பெயருடைய கோவை மகேசன் கோப்பாயில் 1937 இல் பிறந்தார். அவரது பத்திரிகைத் துறையின் ஆரம்பகால வாழ்க்கையில் சுதந்திரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய அவர் பின்னர் அதன் ஆசிரியராய் நின்று தீக்கனல் மூட்டும் எழுத்துக்களால் ஈழத் தமிழர்களிடம் இன, மொழி, பண்பாட்டு உணர்வுகளைக் கிளரவைத்தார். தமிழரசுக் கட்சியின் தீவிர தொண்டனாக இருந்து உழைத்த பின்னர் தமிழரசுக் கட்சியும் இலங்கைத் தமிழ் காங்கிரசு கட்சியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக் கட்சியும் இணைந்து உருவான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொண்டனாக இருந்து உழைத்தவர். பின்னர் இ. தொ. கா. கூட்டணியிலிருந்து விலகிக்கொண்டது. சுதந்திரத் தமிழீழம் அமைப்போம் என்ற இலட்சியத்தைக் காற்றில் பறக்கவிட்ட கூட்டணியின் போலிச் செயற்பாடுகளைக் கண்டித்து அதிருப்தியுற்று வெளியேறிய பின்னர் டாக்டர் தர்மலிங்கம், ஈழவேந்தன் ஆகியோருடன் இணைந்து தமிழ் ஈழ விடுதலை முன்னணி என்ற கட்சியைத் தோற்றுவித்து அதன் தலைவராக இருந்தார்.

அவரின் எழுத்துக்கள், செயற்பாடுக ளைக் கண்டு ஆத்திரமுற்ற சிறீலங்கா இனவாத அரசு 1983 களில் அவரைச் சிறையில் அடைத்தது. வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலை நிகழ்வுக் காலப்பகுதியில் சிறையிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சிறையில் மனிதாபிமானமற்ற முறையில் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார். அதன் விளைவாக இரத்த அழுத்தம், முடக்கு வாதம், நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்பட்டு அவரைப் பாடாய்ப் படுத்தியபோதும் தேசக்கடனை நெஞ்சிருத்தி செயற்பட்டார் என்றால் மிகையாகாது. அவர் சிறை மீண்ட பின்னரும் சிறீலங்கா அரச படைகள் தேடியழிக்கும் முயற்சிகள் தொடர்ந்தவண்ணமாய் இருந்தபோது தமிழ் நாட்டுக்குச் சென்று அங்கிருந்து வீரவேங்கை என்ற பத்திரிகையை நடாத்தினார். அதன் பத்திரிகை ஆசிரியராக இருந்து சரியான பாதையில் செல்லும் விடுதலை அமைப்பைத் தேர்ந்து அதனோடு ஆத்ம பலத்தோடு நின்று உழைத்தார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நட்பு ரீதியாகப் பழகும் வாய்ப்பும் அவருக்கு ஏற்பட்டது.

சுகயீனம் காரணமாக சென்னை மந்தைவெளி பி. எஸ். எஸ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் 07. 04. 92 அன்று காலமானார்.

தமிழீழம் உருவாக வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்பாளராகவும், இலட்சிய உறுதி வாய்ந்தவராகவும் நின்று மரணத்தைத் தழுவிக் கொண்ட அவரின் இறுதி விருப்பம் தனது அஸ்தி தமிழீழ மண்ணுக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும் என்பதாக இருந்தது.

✻

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அன்னை பூமி

### ஆய்வு



வீதிகளைத் திருத்தத் தேவைப்படும் கல், மண், தார் போன்ற பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கல், தார் போன்றவற்றுடன் நெல்லின் உமியையும் சேர்த்து வீதிகளைப் போடவும்; மணல், தார் ஆகியவற்றுடன் சுண்ணாம்பு கலந்த கலவை ஒன்றைப் பாவித்து சிறுகுழிகளைச் செப்பனிடவும் யாழ் மாநகர சபை பொறியியலாளர் பிரிவு மேற்கொண்ட ஆய்வு வெற்றியளித்துள்ளது.


### 'சொல்லும் செயலும்'



பலாலி இராணுவ முகாமிலிருந்து கட்டுவன் பகுதியூடாக முன்னேற முயன்ற இராணுவத்தின் கவச வாகனத்தை தகர்த்தெறிந்து ஆயுதங்களைக் கைப்பற்றும் வேளை, கப்டன் வீரத்தேவன் வீரமரணமடைந்தார்.


'களத்தில் நின்று வேங்கைகள் ' எனப் பெயரிட்டு அண்மையில் வெளியிடப்பட்ட ஒலிப்பதிவு நாடாவில் கப்டன் வீரத்தேவன் பாடிய பாடல்களான 'போருக்குப் போகும் புலி வீரர்', 'தாயினும் மேலான காவலன் யாரடா?', 'அலைகடல் மீதினில் பயணம்', 'எங்களின் தேசம்' ஆகிய இவரது பாடல்கள் பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு புரட்சிப் பாடகனாகவும், போராளியாகவும் "சொல்லும் சொல்லே செயல்" என வாழ்ந்த ஒரு விடுதலை வீரன்.

### எழுச்சி விழா




இன விடுதலையையும், கலை வளர்ச்சியையும் இரு கண்களாக மதித்து தமிழிசை விழாவிற்கு தமது ஆசியையும் பேராதரவையும் நல்கியமைக்காக தலைவர் வே. பிரபாகரனுக்கும், போர்க்காலச் சூழ்நிலையில் கர்நாடக இசையில் மக்களுக்கு ஈடுபாட்டை உண்டாக்கும் விதத்தில் தமிழிசை விழாவை ஓர் எழுச்சி விழாவாக நடாத்தியமைக்காக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்துக்கும் தமிழீழக் கலைஞர்கள் தமது நன்றியை தெரிவித்துள்ளனர்.

### ஈழத்துக் கவிஞர்கள்



ஈழத்து தமிழ்க் கவிதை நூல்கள், ஈழத்துக் கவிஞர்கள் பற்றிய தொகுப்பு ஒன்று விரைவில் வெளியிடப்படவுள்ளது என யாதுமூரான் தமிழ் தென்றல் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் யாழ்ப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

### சாதனை



கிளிநொச்சியைச் சேர்ந்த சீவல் தொழிலாளர் ஒருவர் முப்பத்திஐயாயிரம் ரூபாவை மாத வருமானமாகப் பெற்று சாதனை புரிந்துள்ளார். மேலும் சில தொழிலாளர்கள் சீவல் தொழில் ஊதியமாக மாதம் இருபத்தியிரண்டாயிரம் ரூபாவிற்கும் குறையாத ஊதியத்தை பெற்றுள்ளார்கள். இந்த அதிகரித்த மாதாந்த உற்பத்தி ஊதியம் தமிழீழத்திலே சாதனையாக கருதப்படுகிறது.

### காடு வளர்ப்பு




உணவு, விறகு, நிழல் போன்ற தேவைகளுக்காக வளர்க்கப்படும் மகோகனி, வாகை, புளி, வேம்பு, சவுக்கு, இலுப்பை, இலவு, மருது, நெல்லி, நாவல், கற்தேக்கு, இப்பில் இப்பில் என இரண்டு இலட்சம் மரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் முயற்சியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் காடு வளர்ப்புப் பிரிவு ஈடுபட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "தரிசனம்"

## வீடியோப்பத்திரிகை




எமது தேசத்தின் விடுதலை ஒளிக்கீற்றுகளைச் சுமந்து வருகின்றது.
மண்ணின் உயிர் துடிப்போடும், மக்கள் வாழ்க்கைக் கதையோடும்,
நிதர்சனத்தை உங்கள் முன் தரிசனம் ஆக்குகின்றது.
தமிழீழத்தின் மொழி, பண்பாடு, அறிவியல், போரியல் இவற்றின்
அடித்தள வளர்ச்சிகளையும், அழிவில் இருந்து மீளவும் கருவுறும்
உறுதியையும் உளம்புகுந்து தரிசிக்க வைக்கும் உன்னதம்.
உலக நடப்புக்களையும், திரைப்பட விமர்சனங்களையும், சிறுவர் நிகழ்வுகளையும்
கொண்ட பல்வேறு அம்சங்களைத் தாங்கி வெளிவருகிறது.

இன்னும் உங்களுக்கு தரிசனம் கிடைக்கவில்லையா?

தரிசனம் பார்வை - 5 வெளிவந்துவிட்டது.

தொடர்புகட்கு:
MOHANATHAS
9,11 BD. GENERAL FERRIE
94100 ST MAUR - DES FOSSE
FRANCE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இவர்கள் முகங்களில்
விடுதலை முகை அவிழ்த்த
சிறு மின்னல் ...



திசையெலாம்
முழங்க
எங்கள் தேசம்
எழுந்து
நிமிருது!



எங்கள்
பூமிசாத்திரம்
கற்றுத்-
தேர்ந்த அவன்
பாட்டிக்கு
கதை சொல்கிறான்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்